வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    25.03.2025 செவ்வாய்க்கிழமை    இதழ் : 86    பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு வெற்றுக் கொள்ளலாம்.

# 3 இலங்கை படை அதிகாரிகள், கருணாவுக்கு இங்கிலாந்து தடை

## கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என வெளியுறவு அமைச்சு அறிக்கை

லண்டன், மார்ச் 25

**கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட நான்கு நபர்களுக்கு எதிராக இங்கிலாந்து தடைகளை அறிவித்துள்ளது. இது பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதையும் குற்றவாளிகளை தொடர்ந்து பாதுகாக்கும் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் கலாசாரத்தை சவால் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அது கூறுகிறது.**

இங்கிலாந்து வெளியுறவு செயலாளர் டேவிட் லாம்மி வெளியிட்ட இந்தத் தடைகள் இலங்கை இராணுவம் மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய துணை இராணுவக் குழுவைச் சேர்ந்த மூத்த நபர்களை குறிவைக்கின்றன. இதில் நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய நபர்கள் உள்ளனர்.

முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, முன்னாள் இராணுவத் தளபதி ஜகத்

11



## ஐ. நாவுக்கான பிரதிநிதியாக முன்னாள் பிரதம நீதியரசர்?



கொழும்பு, மார்ச் 25

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக முன்னாள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த நியமனத்துக்கு உயர் பதவிகளுக்கான குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## பயங்கரவாத சட்டத்தை அரசு எப்படி கையாளப்போகிறது?

### கேள்வி எழுப்புகிறார் ரவி கருணாநாயக்க


கொழும்பு, மார்ச் 25

ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையில் எவ்வித சிக்கலும் ஏற்படக்கூடாதெனில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. இதனை எவ்வாறு கையாளப் போகின்றனர் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

11

## அமெரிக்க இறக்குமதியை இனி இலங்கை அதிகரிக்க வேண்டும்!

### ட்ரம்ப் நிர்வாகம் கூறலாம் என்கிறார் ஜூலி சங்



கொழும்பு, மார்ச் 25

அமெரிக்காவிலிருந்து அதிகமான பொருட்களை இலங்கை வாங்கவேண் டும் என அமெரிக்காவின் புதிய டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் எதிர்பார்க்கலாம் என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனுக்கும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையில் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

கொழும்பு அமெரிக் கத் தூதுவர் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது ,வெளிவிவகார

11

## மின்சார சட்டத் திருத்தம் தொடர்பில் மின்சக்தி - நிதி அமைச்சுகள் மோதல்

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 25

மின்சார சட்டத் திருத்தம் தொடர்பில் நிதி அமைச்சுக்கும் மின்சக்தி அமைச்சுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. மின்சக்தித் துறை மறுசீரமைப்பு நாட்டுக்கு தகுந்த வகையில் இடம்பெற வேண்டும். ஆனால், அரசாங்கம் பழைய பாதையிலேயே பயணிக்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்

11

## ஐ.தே.க.வுக்கு வைத்த பொறியில் ஜே.வி.பி. சிக்கிக் கொண்டுள்ளது

### சமிந்த விஜேசிறி எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 25

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையைக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சியை இலக்கு வைக்க ஜே.வி.பி. திட்டமிட்டது. ஆனால் தற்போது அந்த பொறியில் ஜே.வி.பி.யே சிக்கிக் கொண்டது.

11

## சைக்கிளில் சென்றவர் ஓட்டோ மோதி மரணம்

### நாவற்குழியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் மீது ஓட்டோ மோதியதில் அவர் நேற்று உயிரிழந்தார். நாவற்குழி - புதிய குடியிருப்பு திட்டம் பகுதியை சேர்ந்த அந்தோனி ரிக்மன் டெனிஸ் (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் நேற்று முன்தினம் தனது பத்து மாத குழந் தையையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு

11

## கம்மன்பில விடுதலை!

கொழும்பு, மார்ச் 25

அவுஸ்திரேலிய பிர ஜையின் நிறுவனத்துடன் தொடர்புடைய நிதி மோசடி வழக்கில் முன் னாள் பாராளுமன்ற உறுப் பினர் உதய கம்மன்பில மற்றும் மற்றுமொரு சந்தேக நபரை நிரபராதி என விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

போலியான சட்டப் பத்திரம் தயாரித்து

11

## ரணில், மகிந்தவுடன் கூட்டணியா? பச்சைப் பொய் என்கிறார் சஜித்!

கொழும்பு, மார்ச் 25

சஜித், மகிந்த, ரணில் இணையவுள்ளதாக பல்வேறு பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அது மாத்திரமல்லாது அவ்வாறு செய்தி வெளியிட்டு தொலைகாட்சி அலைவரிசைகளில் காலையில் பத்திரிகை முக்கிய செய்தி வாசிப்பு நிகழ்ச்சிகளில் தலைப்புச் செய்திகளாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இது அப்பட்டமான பொய் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள்



சக்திக்கு யாருடனும் சேர

11

## இறக்குமதி செய்த சி.ரி. ஸ்கான் இயந்திரம் ஆறு வாரங்களாக சுங்கப் பிரிவில் தடுப்பு

கொழும்பு, மார்ச் 25

களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலைக்காக இறக்குமதி செய்யப்பட்ட சி. ரி. ஸ்கேன் இயந்திரம் கடந்த 6 வாரங்களாக சுங்கப் பிரிவில் விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கதிரியக்க தொழில்நுட்ப வியலாளர்கள் சங்கத் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்-

களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலைக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ள சுமார் 1500 இலட்சம் ரூபாய் பெறுமதிமிக்க சி. ரி. ஸ்கான் இயந்திரம் கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி நாட்டை வந்தடைந்தது.

எனினும், தற்போது 6 வாரங்கள் கடந்துள்ள நிலையில் இவ்வியந்திரம் சுங்கப் பிரிவிலிருந்து விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் விழிப்புணர்வு பேரணிக்கு இடையூறு ஏற்படுத்திய பொலிஸார்!

வவுனியா, மார்ச் 25

வவுனியாவில் காசநோய் விழிப்புணர்வு ஊர்வலத்துக்கு, போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி இடையூறு ஏற்படுத்திய சம்பவம் பதிவாகியுள்ளது.

காசநோய் விழிப்புணர்வு பேரணியை மேற்கொள்வதற்கு, காசநோய் கட்டுப்பாட்டு பிரிவால் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டது.

இதன்போது, அங்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி, குறித்த ஊர்வலத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என வைத்தியர்களிடம் தெரிவித்தார்.


இதன் போது, வன்னி பிரதி பொலிஸ் மா அதிபரிடம் ஊர்வலம் தொடர்பில் தெரியப் படுத்தியதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

எனினும்,போக்குவரத்து பொறுப்பதிகாரி அனுமதி வழங்க மறுத்துள்ளார்.

இதனை ஊடகவியலாளர்கள் இருவர் ஒளிப்பதிவு செய்தவேளை பொலிஸார் இடையூறை ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்ட சம்பவமும் பதிவாகியுள்ளது.

அத்துடன், ஊர் வலத்தில் கலந்து கொள்ள சென்றிருந்த முச்சக்கரவண்டிகளையும், போக்குவரத்து பொறுப்பதிகாரி ஒளிப்பதிவு செய்திருந்தார்.

இந்த ஊர்வலம் தொடர்பில், வைத்தியர்கள், பிரதி பொலிஸ் அதிபர், வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் தொலைபேசியில் கலந்துரையாடியதன் அடிப்படையில், போக்குவரத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஊர்வலத்திறகு அனுமதி வழங்கினார்.






அதன் பின்னர், வைத்தியர்களால் காசநோய் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது. (அ)

# பெண்ணின் அசிட் வீச்சில் இளைஞர் ஒருவர் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 25

களுத்துறை - பேருவளை, அம்பேபிட்டிய பிரதேசத்தில் இரு தரப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறின்போது அசிட் வீச்சுக்குள்ளாகி இளைஞன் ஒருவன் காயமடைந்துள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இரண்டு பெண்களுக்கும் இளைஞர் குழுவொன்றுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின்போது குறித்த பெண்கள் இருவரும் எதிர்த் தரப்பில் இருந்த இளைஞர் ஒருவன் மீது அசிட் வீச்சை மேற்கொண்டுள்ளனர்.

காயமடைந்த இளைஞர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உணவுப் பொதிக்காக ரயிலை தாமதப்படுத்தி சாரதி சிக்கலில்

கொழும்பு, மார்ச் 25

மறந்துபோன உணவுப் பொதியைக் கொண்டு வரும் வரை ரயிலைத் தாமதப்படுத்திய ஓட்டுநருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

குருநாகலில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த ரயிலே இவ்வாறு தாமதமாக இயக்கப்பட்டது.

தமது உணவு வழமையாக வைக்கப்படும் இடத்தில் இல்லாமையினால் அந்த உணவுப் பொதியைக் கொண்டு வரும் வரை ரயிலை இயக்காமல் தாமதப்படுத்தியுள்ளார்.

இதனால், பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# சுழிபுரம் பகுதியில் கசிப்பு விற்பனை செய்தவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 25

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - காட்டுப்புலம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 26 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து ஒரு போத்தல் கசிப்பு மீட்கப் பட்டது.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# மேர்வின் சில்வா மீளவும் மறியலில்

கொழும்பு, மார்ச் 25

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட 3 சந்தேக நபர்களும் மீள விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி வரை குறித்த மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிரிபத்கொடவில் உள்ள அரச நிலத்தை போலி பத்திரங்களை பயன்படுத்தி விற்பனை செய்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

# பொன்னாலைப் பாலத்தில் கடலுக்குள் பாய்ந்த ஓட்டோ

## தந்தையும் மகனும் படுகாயம்



யாழ்ப்பாணம், மார்ச் 25

பொன்னாலை பாலத்தில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் தந்தையும் மகனும் படுகாயமடைந்தனர்.

காரைநகரில் இருந்து பொன்னாலைப் பாலத்தினூடாக பயணம் செய்த முச்சக்கர வண்டி நேற்று வேகக் கட்டுப்பாட்டை மீறி, வீதியை விட்டு விலகிக் கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதனால் முச்சக்கர வண்டியில் பயணித்த தந்தையையும் மகனும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் குறித்தான விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்பா வகை அரிசிக்கு தட்டுப்பாடு

கொழும்பு, மார்ச் 25

பண்டிகைக் காலத்தில் சந்தையில் கீரி சம்பா மற்றும் சம்பா அரிசிக்கு மேலும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அரிசி மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சந்தையில் கீரிச் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக மரந்தஹ முல்ல அரிசி வர்த்தக சங்கத்தின் தலைவர் பீ. கே. ரஞ்சித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் கீரி சம்பா அரிசி விற்பனையிலிருந்து விலகியுள்ளதால் இவ்வாறு இவ்விரு அரிசிகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களிலிருந்து இவ்வாண்டு ஏப்ரலில் இவ்வாறு அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் சம்பா மற்றும் கீரி சம்பா அரிசிகளுக்கு மேலும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்- என்றார். (அ)

# காசநோயால் கடந்த வருடம் வவுனியாவில் 9 பேர் இறப்பு

## 56 பேர் பாதிக்கப்பட்டனர்

வவுனியா, மார்ச் 25

காசநோயினால் வவுனியாவில் கடந்த வருடம் 9 பேர் இறந்துள்ளதுடன் 56 பேர் நோயாளர்களாக இனம்காணப் பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட காசநோய் கட்டுப் பாட்டுப் பிரிவின் வைத்திய அதிகாரி கே. சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இம்முறை "ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டுவர முடியும்" எனும் தொனிப்பொரு ளில் உலக காச நோய் தினம் மார்ச்24 ஆம் திகதி நினைவுகூரப்படுகின்றது.

இலங்கையை பொறுத்த வரை ஒரு இலட்சம் பேரில் 62 பேர் காசநோயாளர்களாக இனம்காணப்படவேண்டும்.

ஆனால், கடந்த வருடம் 8 ஆயிரம் பேரே நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். விகிதாசாரத்தின்படி அதன் எண்ணிக்கை 14 ஆயிரமாக இருக்கவேண்டும்.



கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் 56 நோயாளர்கள் இனம்காணப்பட்டனர்.அதில் 9பேர் உயிரிழந்தனர். அவர்கள் நோய் வந்து உரிய நேரத் தில் சிகிச்சைக்கு வராமல் காலதாமதமாக வந்தமையால் அந்த மரணம் ஏற்ப்பட்டது.

குறிப்பாக தொடர்ச்சியாக இரு வாரங்களுக்கு மேற்பட்ட இருமல், மாலை நேரத்தில் காய்ச்சல், உணவில் நாட்டம் இன்மை, உடல்நிறை குறைவடைதல், சளியுடன் இரத்தம் வெளியேறல் இப்படியான அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக இருக்கலாம்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் அருகிலுள்ள பொது வைத்தியசாலைகளுக்கு சென்று சாதாரண சளிப் பரிசோதனையை இலவசமாக செய்து கொள்வதன் மூலம் இந்த நோயை இனம் காணலாம்.

எந்தவித அறிகுறியும் இல்லாமலும் இந்த நோய் உடலில் இருக்கலாம். குறிப்பாக ஏற்கனவே, நோய் ஏற்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள், அல்லது நாட்பட்ட நோய் கொண்டவர்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், சிறுநீரக நோயாளர்கள் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு அறிகுறிகள் வெளிப்படாமல் இந்த நோய்க் கிருமி தங்கக்கூடும். அப்படியானவர்களுக்கு பரிசோதனையை செய்வதன் மூலம் அதனைக் கண்டறியலாம்.

ஒருவருக்கு காசநோய் ஏற்பட்டால் ஆறு மாதத்துக்கு நேரடிக் கண்காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளை பெற்றுக்கொண்டால் அதனை முற்றாக குணப்படுத்தலாம். அதற்கான மருந்து உள்ளது. அது தொடர்பில் அச்சம் கொள்ள தேவையில்லை. சிகிச்சைகளை எடுக்கத் தவறி னால் அது தீவிரமடைந்து இறப்புக்கு வழிவகுக்கும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.03.2025 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஈழ அகதி மக்கள் நாடு திரும்புதல்

தென்னிந்திய முகாம்களில் அகதிகளாக வாழும் வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழ் மக்களை இலங்கைக்கு திரும்பச் செய்வதே தமது எதிர்பார்ப்பு என்று வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டிருக்கிறார். இந்தியாவிலுள்ள ஈழ அகதிகள் தொடர்பில் பல தசாப்தங்களாக பேசப்பட்டு வருகின்றது. முதலில் இந்த விடயம் தொடர்பில் தமிழ் கட்சிகளே அதிகம் பேசியிருந்தன. புலம்பெயர் நிதிப் பங்களிப்பின் ஊடாக திருகோணமலையைச் சேர்ந்த மக்களை மீளவும் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் போவதாகக் கூறப்பட்டது. ஆனால், விடயங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவாறான முன்னேற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

திருகோணமலை போன்ற பகுதிகளிலிருந்து 1990களுக்கு பின்னரான காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இந்தியாவுக்கு சென்றிருக்கின்றனர். அவர்களில் சில நூற்றுக் கணக்கானவர்கள் மட்டுமே நாடு திரும்பியிருக்கின்றனர். கிடைக்கும் தகவல்களின்படி அதிகமானவர்கள் இந்தியாவையே தங்களின் நாடாக கருதுகின்றனர்.

அவர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்னும் கோரிக்கையை தமிழ்நாட்டை சேர்ந்த மனித உரிமைகள் ஆர்வலர்கள் கோரி வருகின்றனர். எனினும், ஆளும் பாரதிய ஜனதா கட்சி அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனைய நாடுகளிலிருந்து இந்தியாவில் தஞ்சமடைந்தவர்களுக்கு குடியுரிமை வழங்கிய போதிலும்கூட, ஈழத் தமிழ் மக்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கு இந்திய மத்திய அரசாங்கம் ஆர்வம் காண்பிக்கவில்லை.

இந்த நிலையில் அகதியாக வாழும் மக்களை சொந்த நாட்டுக்கு கொண்டுவருதற்கான முயற்சிகளை மேற்கொள்வதிலும் பல்வேறு இடர்கள் உண்டு. முதலில் இந்திய அகதி முகாம்களில் வாழும் மக்கள் இந்த முன்மொழிவை ஏற்க வேண்டும். ஏற்கனவே நாடு திரும்பிய மக்களுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்களை மீளவும் இந்த சமூகத்தோடு ஒன்றிணைப்பதற்கான சமூக ரீதியான முன்னெடுப்புகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை.

உதாரணமாக திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களை மீளவும் திருகோணமலையில் குடியமர்த்துவதில் சிலர் காண்பித்த ஆர்வம் அந்த மக்களுக்கானது அல்ல. மாறாக, திருகோணமலையின் சனத்தொகை குறைவடைந்து வருகிறது காரணம் அதிகமானவர்கள். ஏற்கனவே, ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து விட்டனர் - இப்போதும் பலர் வெளியேறி வருகின்றனர். இந்த நிலையில் அகதி முகாம்களிலிருக்கும் மக்களை கொண்டு வந்தால் அதன் மூலம் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கலாம் என்னும் அரசியல் கணக்கின் அடிப்படையில்தான் அகதிமுகாம் மக்களுக்காக சிலர் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

உண்மையில், அகதி முகாம்களில் வாழும் மக்களை மீளவும் நாட்டுக்குக் கொண்டுவர வேண்டுமாயின், அவர்களின் எதிர்காலத்துக்கான அனைத்து வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும். அவர்களின் பிள்ளைகளுக்கு தொழில் முயற்சிகள் உறுதிப்படுத்தப்படவேண்டும். அவ்வாறில்லாது ஈழ அகதிகளை நாட்டுக்கு கொண்டு வருவது என்பது, அகதி முகாம்களில் வாழும் வாழ்வை விடவும் நெருக்கடியான வாழ்வுக்குள் தள்ளிவிடுவதாக இருக்கக்கூடாது.

## தென்னக்கோனுக்கு வீட்டிலிருந்து சாப்பாடு!



கொழும்பு, மார்ச் 25

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு வீட்டிலிருந்து கொண்டு வரப்படும் உணவை உட்கொள்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அவர் விடுத்த கோரிக்கையை பரிசீலித்ததன் பின்னர் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்ற அவரது கோரிக்கையை கருத்திற் கொண்டு தேசபந்து, சிறைச்சாலைக்குள் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் செய்தித் தொடர்பாளர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்தார். (அ)

## இரவு விடுதியில் நடந்த மோதல் யோஷிதவுக்கு தொடர்பில்லை

கொழும்பு, மார்ச் 25

கொழும்பு பார்க் வீதியில் உள்ள இரவு விடுதியில் நடந்ததாக கூறப்படும் மோத லில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவுக்கு தொடர்பு இல்லை என்பது பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு விடுதிக்கு வெளியே யோஷித ராஜபக்ஷவுடன் வந்த ஒரு குழு மோதலில் ஈடுபட்டதை அடுத்து, கொம்பனி வீதி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த மோதல் குறித்த காட்சிகள் சி. சி. ரி. வி. கமெராக்களில் பதிவாகியுள்ளது. இந்த சம்பவத்தின் போது விடுதியை சேர்ந்த ஒரு பாதுகாவலர் காயமடைந்து தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

விடுதியினுள் செல்வதற்கு அடையாள மணிக்கட்டுப் பட்டி அணிவது கட்டாயம் என்று பாதுகாவலர்கள் தெரிவித்ததை அடுத்து ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து இந்த மோதல் நடந்ததாக தெரிவிக்கப்பட்டது.

குழு உறுப்பினர்களில் ஒருவரிடம் அத்தகைய பட்டி இல்லாததால் காவலர் நடத்திய விசாரணையின் போது வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் ஏற்பட்ட போது யோஷித ராஜபக்ஷவும் அவரது மனைவியும் சம்பவ இடத்தை விட்டு வெளியேறி விட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள ளதாகவும், அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கோண்டாவிலில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், மார்ச் 25

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் இருபத்தி நான்காவது நிகழ்வு இம் மாதம் 28, 29, 30ஆம் திகதிகளில் கோண்டாவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் தொடக்க நிகழ்வாக வயிரமுத்து திவ்வியராஜன் ஆக்கத்தில் உருவான 'ஒரு சின்னக்கதை' பாகம் 2 மற்றும் 'சாவை தள்ளி வை' ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு ஆசிரியரும் பட்டிமன்ற நடுவருமான த. நி. சிறீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வெளியீட்டுரையினை ஜீவநதி சஞ்சிகை மற்றும் வெளியீட்டகத்தின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரனும், 'சாவை தள்ளி வை' நூல் தொடர்பான அறிமுக உரையினை ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் தலைவர் வைத்தியநிபுணர் சி.சிவன்சுதனும், 'ஒரு சின்னக் கதை' பாகம் 2 பற்றிய கருத்துரைகளை சட்டத்தரணி பசுபதி ஐங்கரன், ஓய்வுநிலை ஆசிரியர் விஜயா பீரிஸ், சி. மகாலிங்கம், அ.குணசிங்கம், வ.மோகநாதன், தேவ சபா அனுஜன், சிறீபாலன் சிந்துசன், மாதங்கி யாதவன், சசிகா நித்தியானந்தம், பகீரதன் நிரூசன் ஆகியோரும் நிகழ்ச்சித் தொகுப்பினை மாணவி தர்மிகா உமாசுத சர்மாவும் மேற்கொள்ளவுள்ளனர்.

விசேட கலை நிகழ்வுகளாக கனிஸ்ரனின் நெறியாள்கையில் கே.ஏ.எஸ்.சத்திய மனை நூலக மாணவர்களின் 'வெற்றி வெற்றி' இசைக் கூத்தும், செம்முகம் ஆற்றுகை குழுவினரின் தயாரிப்பில் சீலனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'எங்கே எங்கே குடை எங்கே?', 'எலியார் எங்கே போனார்?' ஆகிய சிறுவர் நாடகங்களும் இடம்பெறுவுள்ளன.

மேலும் இந் நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி - 25 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 11
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்** உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**இடபம்** கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்** சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**கடகம்** மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நன்மைகள் உண்டாகும்.

**சிம்மம்** விஐபிகள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் .

**கன்னி** நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்** பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்க ளால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**விருட்சிகம்** குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதுமை படைக்கும்.

**மகரம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் .

**கும்பம்** விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடு வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மேலதிகாரிகளால் விவாதம் வரக்கூடும்.

**மீனம்** பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

# யாழில் நிதி மோசடிகள் அதிகரிப்பு!

*யாழ்ப்பாணம், மார்ச்.25*

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஒன்லைன் மூலமாக நிதி மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. இதன் மூலம், ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிதி மோசடிகள் ஊர்காவற்துறை பகுதியில் மாத்திரம் நான்கு இடம்பெற்றுள்ள நிலையில் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்குகளும் இடம்பெற்று வருகின்றன. இந்த ஒன்லைன் மோசடிகள் பல்வேறு வகையில் இடம்பெற்று வருகின்றன.

நிகழ்நிலை செயலி ஒன்றை மக்களிடையே பகிர்ந்து அதில் முதலீடு செய்யுமாறு ஊக்குவிக்கப்படுகிறது. அந்தச் செயலியில் ஆரம்பத்தில் சிறிய தொகையை முதலிடுவதன் மூலம் சிறிய அளவிலான கொடுப்பனவு வழங்கப்படுகிறது. மக்கள் முதல் வருமானத்தை நம்பி அடுத்த தடவை பெரிய ஒரு தொகையை முதலீடு செய்யும் பட்சத்தில் அந்த நிதியானது மோசடியாளர்களால் அபகரிக்கப்படுகிறது.

மேலும், வங்கிக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்துள்ளவர்களது கணக்கு இலக்கங்கள் மற்றும் அடையாள அட்டை இலக்கங்கள் என்பன ஆசை வார்த்தை கூறி மக்களிடமிருந்து மோசடியாளர்களால் பெறப்படுகிறது. பின்னர் அவர்களது தொலைபேசிக்கு இரகசிய இலக்கம் அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து அந்த இரகசிய இலக்கமானது பெறப்பட்டு அவர்களது வங்கிக் கணக்கில் உள்ள பணம் மோசடி செய்யப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து காணப்படுகின்றன. ஊர்காவற்துறை நீதிமன்றத்திலும் இவ்வாறான வழக்குகள் காணப்படுகின்றபடியால் மக்களுக்கு இது குறித்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்துமாறு ஊர்காவற்துறை நீதிவான், ஊர்காவற்துறை பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார். (எ-05)

# யாழ்ப்பாணம் - காரைநகர் வீதியில் தனியார் பேருந்துகள் ஓட்டப்போட்டி!

*யாழ்ப்பாணம், மார்ச்.25*

யாழ்ப்பாணம் - காரைநகர் வீதியில் இரு தனியார் பேருந்துகளின் ஓட்டப்போட்டியால் வீதியில் சென்ற பொதுமக்கள் மரண பயத்தில் உறைந்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 10.15 மணியளவில் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

கீரிமலையிலிருந்து யாழ். நகர் நோக்கிச் சென்ற தனியார் பேருந்தும், காரைநகரிலிருந்து யாழ். நகர் நோக்கிச் சென்ற தனி யார் பேருந்துமே இவ்வாறு ஓட்டப் போட்டியில் ஈடுபட்டு மக்களை கதிகலங்க வைத்தன.

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் ஆரம்பித்த போட்டி ஆறுகால் மடம்வரை தொடர்ந்தது.



இதில், கீரிமலை - யாழ்ப்பாணம் தனியார் பேருந்து சாரதி சமிக்கை விளக்கை உரியமுறையில் ஒளிரவிட்டு பேருந்தை செலுத்தியபோதும் காரைநகர் - யாழ். பேருந்து சாரதி சமிக்கை விளக்கை உரியமுறையில் ஒளிரவிடாது தாறுமாறாக பேருந்தை செலுத்தியதனை அவதானிக்க முடிந்தது.

கீரிமலையிலிருந்து வந்த பேருந்தை முந்துவதற்கு பல முறை முயற்சித்த காரைநகரில் இருந்து வந்த பேருந்து, ஆறுகால் மடத்துக்கு பின்பு மெதுவாக சென்றது. இதனால், பயணிகள் பலரை இந்த இரண்டு தனியார் பேருந்துகளும் ஏற்றாது சென்றதையும் அவதானிக்க முடிந்தது. (எ-05)

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர்களுடனான கலந்துரையாடல்

*யாழ்ப்பாணம், மார்ச்.25*

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வலிகாமம் வடக்கு பிரதேச சபை வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் தெல்லிப்பழையிலுள்ள வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் புளொட் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன், வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் வலி. வடக்கு பிரதேச சபைக்கு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும், கட்சியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (எ-05)

# வேட்புமனு நிராகரிப்பு; இன்று வழக்கு தாக்கல்?

*யாழ்ப்பாணம், மார்ச் 24*

உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் தமிழ் மக்கள் கூட்டணியும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்படும் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் நிசாம் காரியப்பரும் முன்னிலையாவர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# போதைப்பொருள் தடுப்பு குழு அமைப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 25*

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று வடக்கு பகுதியில் போதைப்பொருள் தடுப்புக் குழு அமைக்கப்பட்டது.

செம்பியன்பற்று வடக்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில், பிரதேச போதைத் தடுப்பு உத்தியோகத்தர்களால் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது

இந்தக் கலந்துரையாடலில் கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் தற்காலத்தில் வடமராட்சி பிரதேசத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை தொடர்பாகவும் அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்றும் கலந்துரையாடப்பட்டது.

இதன்பின் எதிர்காலத்தில் போதைப்பொருள் இல்லாத சமுகத்தை கட்டியெழுப்ப வேண்டும் எனும் எண்ணக்கருவில் கிராம போதைத் தடுப்பு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலவு அறிக்கை வழங்காத வேட்பாளர் 3 வருடம் வாக்களிக்கும் உரிமை இழப்பர்!

## பவ்ரல் அமைப்பு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

**எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் தேர்தல் தொடர்பான செலவு அறிக்கையை சமர்ப்பிக்க தவறுபவர்கள் மூன்று வருடங்களுக்கு வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரிடும் என பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.**

தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்ட 150 இற்கும் அதிகமான வேட்பாளர்கள் உரிய திகதிக்கு முன்னதாக தங்களது செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறியுள்ளனர்.

இந்த முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 80,000 இற்கும் அதிகமானோர் போட்டியிடுகின்றனர்.

இந்த நிலையில் குறித்த வேட்பாளர்களில் எவரேனும் தங்களது தேர்தல் செலவு அறிக்கையை உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் மூன்று ஆண்டுகளுக்கு வாக்களிப்பதற்கான மற்றும் தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமையை இழக்க நேரிடும்.

அத்துடன், 1,000,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

எனவே,

செலவு அறிக்கை தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துமாறு சகல வேட்பாளர்களையும் பெப்ரல் அமைப்பு கோருவதாக அதன் நிறை வேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (அ)

# வளர்ச்சியைப் பதிவு செய்தது இலங்கையின் ஆடை ஏற்றுமதி!

கொழும்பு, மார்ச் 25

இலங்கையின் ஆடை ஏற்றுமதி கடந்த பெப்ரவரி மாதத்தில் 2.3 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அதற்கமைய, 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது ஆடை ஏற்றுமதி 407.93 மில்லியன் டொலர் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த ஆடைக் கைத்தொழில் சங்கங்களின் ஒன்றியத்தினது தற்காலிக தரவுகளின்படி, ஒட்டுமொத்த ஏற்றுமதி மேல்நோக்கிய போக்கைக் காட்டினாலும், அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற முக்கிய சந்தைகளில் செயல்திறன் குறிப்பிடத்தக்க சரிவைச் சந்தித்துள்ளது.

பெப்ரவரி மாதத்தில் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 7.43 வீதம் குறைந்து, 153.11 மில்லியன் டொலராகவும் பிரித்தானியாவுக்கான ஏற்றுமதி 14.58 வீதம் குறைந்து 54.85 மில்லியன் டொலராக பதிவாகியுள்ளது.

எனினும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதி 7.54 வீதம் அதிகரித்து, 120.69 மில்லியன் டொலராகவும் மற்ற நாடுகளுக்கான ஏற்றுமதி 39.85 வீதம் அதிகரித்து, மொத்தம் 79.28 மில்லியன் டொலராகவும் பதிவாகியுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைக் கைத்தொழில் சங்கங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ)

# இஸ்ரேலில் சட்டபூர்வமான விஸாக்கள் பெற்றுத் தருவதாக கூறி பணம் மோசடி!

கொழும்பு, மார்ச் 25

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களில், ஏதிலிகள் விஸா வைத்திருப்பவர்களுக்கு நாட்டில் வேலை செய்வதற்காக சட்டபூர்வ விஸாக்களை வழங்குவதாக தெரிவித்து பணம் மோசடியில் ஈடுபடும் ஒரு குழு குறித்து தகவல் கிடைத்துள்ளதாக இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்தகைய திட்டம் எதுவும் செயல்பாட்டில் இல்லை எனவும், இதுபோன்ற பொய்யான வாக்குறுதிகளை நம்பி பணம் மோசடி செய்பவர்களிடம் ஏமாற வேண்டாம் எனவும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதர் நிமல் பண்டார, மக்களை வலியுறுத்தியுள்ளார்.

இக்குழுவினர் சில தனிநபர்களிடம் 1.5 மில்லியன் செலுத்துமாறும், அதில் ஒரு பகுதியை முற்பணமாக வழங்குமாறும் கேட்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதன்படி, இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மற்றும் இஸ்ரேல் அரசாங்கம் இது போன்ற எந்தவொரு விஸா வழங்கும் செயல்முறையிலும் ஈடுபடவில்லை என இஸ்ரேலுக்கான இலங்கை தூதர் நிமல் பண்டார மேலும் கூறினார்.

# நிதி, கல்வியறிவு போதுமானதாக இல்லை நிகழ்நிலை மோசடிக்கு ஆளாகும் மக்கள்

## மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 25

மக்களிடையே நிதி கல்வியறிவு போதுமானதாக இல்லாததன் காரணமாக, அவர்கள் நிகழ்நிலை மோசடிக்கு ஆளாகும் நிலைமை அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.



நுவரெலியா மாவட்டத்தில் டிஜிற்றல் கொடுப்பனவுகள் ஊக்குவிப்பு பிரசாரத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வழங்கும் புதிய தொழில்நுட்ப சேவைகள் குறித்து பொதுமக்களை விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நிதி கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளின் போது தாள்கள், நாணயத்தினை எடுத்துச் செல்வதை விட டிஜிற்றல் முறைமையினை பயன்படுத்துவது இலகுவானதாகும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க இதன்போது குறிப்பிட்டார். (அ)

# மாணவிகளை பாலியல் ரீதியாக இம்சித்த உயர்கல்வி நிறுவன உரிமையாளர் கைது!

கொழும்பு, மார்ச் 25

குருநாகல் பகுதியிலுள்ள தனியார் உயர்கல்வி நிறுவனமொன்றில் 10 மாணவிகளை தொடர்ந்தும் பாலியல் ரீதியாக இம்சித்த சம்பவம் தொடர்பில், குறித்த நிறுவனத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மாணவர்கள் அளித்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபருக்குச் சொந்தமான உயர்கல்வி நிறுவனத்தில் கல்வி நோக்கங்களுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவிகள் தொடர்ந்தும் பாலியல் ரீதியாக இம்சிக்கப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# உழவு இயந்திரம் என இறக்குமதி செய்யப்பட்ட சொகுசுக் கார்கள்!

கொழும்பு, மார்ச் 25

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி சொகுசுக் கார்கள் உட்பட ஆயிரக்கணக்கான வாகனங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக கோபா குழுவின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உழவு இயந்திரம் இறக்குமதி செய்வதாகத் தெரிவித்து சொகுசுக் கார்களை இறக்குமதி செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கோபா குழுவின் முன் அழைக்கப்பட்ட போது இந்த உண்மைகள் தெரியவந்துள்ளன. (அ)

# தையிட்டி விகாரையில் புண்ணிய நிகழ்வு தடுப்பு

## சரத் வீரசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 25

யாழ்ப்பாணம் தையிட்டி விகாரையிலிருந்து இராணுவத்தை வெளியேறுமாறு பணிப்புரை வழங்கியவர் தொடர்பில் விவரங்களை வெளியிட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தையிட்டியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரையை அங்குரார்ப்பணம் செய்யும் புனித நிகழ்வு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வழமை போல அனைத்து ஏற்பாடுகளையும் இராணுவத்தினரே மேற்கொண்டார்கள்.

இந்நிலையில் தமிழ் இனவாதிகள் சிலர் அங்கு போராட்டம் நடத்தினார்கள்.

அதன் பின்னர் விகாரையில் இருந்த இராணுவத்தினரை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அரச உயர் மட்டத்திலிருந்து பணிப்புரை வழங்கப்பட்டது.

அதன் பின்னர் அவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறினார்கள்.

இதனால் ஒரு புண்ணிய நிகழ்வு தடுக்கப்பட்டுள்ளது.-என்றார். (அ)

# கிராண்ட்பாஸ் துப்பாக்கிச் சூடு மற்றுமொரு சந்தேக நபர் கைது

கொழும்பு, மார்ச் 25

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகலகம் வீதியில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். தொலைபேசி அழைப்புகள் ஊடாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரிடமிருந்த இரண்டு கைத் தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் கிராண்ட் பாஸ் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்ற னர். (அ)

# பிரசாரத்தின்போது பொதுமக்களுக்குப் பணம் வழங்கியமை உறுதியானால் பதவி பறிபோகும்!

கொழும்பு, மார்ச் 25

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தைப் பின்பற்றி தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட வேண்டியது சகல வேட்பாளர்களினதும் பொறுப்பாகும் என பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தங்களது பிரதேசங்களில் நிலவும் பிரச்னைகள்தீர்ப்பதற்கு தாம் தகுதியானவர் என வேட்பாளர் நிரூபிக்க வேண்டும்.

அத்துடன், ஊழல் இன்றி பொது சொத்துக்கள் தொடர்பில் பொறுப்புடன் செயற்படக் கூடியவர் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். தேர்தலுக்காக கையூட்டல் வழங்கும் வேட்பாளர் ஒருவர், தேர்தல்களில் வெற்றி பெற்றதன் பின்னர் அந்த பணத்தை வசூலிப்பதற்காக செயற்படுவார் என்ற விம்பத்தை மக்களிடையே தோற்றுவிக்கும்.

இந்தநிலையில் தேர்தலில் வெற்றிபெற்று உள்ளூராட்சி மன்ற உறுப்பினராகத் தெரிவான ஒருவர், பிரசாரத்தின்போது, பொதுமக்களுக்குப் பணம் வழங்கியுள்ளமை உறுதிப்படுத்தப்படுமாயின் அவர் தமது பதவியை இழக்க நேரிடும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 மாதங்களுக்கு கடுமையான அரிசி பற்றாக்குறை ஏற்படும்!

## தேசிய விவசாயிகள் ஒன்றியம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 25

**நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 7 மாதங்களுக்கு கடுமையான அரிசிப் பற்றாக்குறை காணப்படுமென தேசிய விவசாயிகள் ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு பெரும்போக நெற் செய்கையின்போது இரண்டு, சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளதாகவும் இது அரிசிப் பற்றாக்குறைக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

தற்போது 8 இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்ரேயர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளதாகவும், வெள்ளத்தால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய விவசாயிகள் ஒன்றியத்தின் தலைவர் சுட்டிக் காட்டினார். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட மேலும் பல பகுதிகளில் குறைந்தபட்சம் 20 சதவீதம் வரை எதிர்பார்த்த விளைச்சல் இல்லாமல் போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அறுவடை நேரத்தில் காட்டு யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளினால் நெல் வயல்கள் சேதமடைவதால், விளைச்சல் மேலும் குறையும் என்றும் அரிசி பற்றாக்குறையை சமாளிக்க, அடுத்த பருவத்தில் குறைந்தது 7 இலட்சம் ஹெக்ரேயர் பரப்பளவில் நெல் பயிரிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் அனுராத தென்னகோன் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் அரிசி கையிருப்பு குறையுமாயின் நாடு கடுமையான அரிசி பற்றாக்குறையை சந்திக்க நேரிடும் என்பதுடன், அரிசியை இறக்குமதி செய்யும் நிலை ஏற்படக்கூடும் எனவும் அவர் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்க நாம் முழு ஆதரவு!

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, மார்ச் 25

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வதற்குரிய பிரேரணை முன்வைக்கப்படும் பட்சத்தில் அதற்கு ஆதரவளிக்கப்படும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கூறியவை வருமாறு-தேசபந்து தென்னக்கோன் 20 நாள்கள் தலைமறைவாகி இருந்தார். அவர் இந்நாட்டில் சட்டத்தை கேள்விக்குறியாக்கியுள்ளார். அவரை பதவி நீக்குவதற்குரிய சாதாரண காரணிகள் உள்ளன. எனவே, பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டால் அதற்கு நாம் முழுமையான ஆதரவு வழங்கப்படும்.

எமது நாட்டுக்கு தகுதியான நிரந்த பொலிஸ்மா அதிபரொருவர் அவசியம். தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கு நாமே அரசமைப்பு பேரவையில் கடும் எதிர்ப்பை வெளியிட்டோம். எனவே, அவரை சட்டப்பூர்வமாக பதவி நீக்குவதற்கு நாம் தயார். அதற்குரிய பிரேரணையை விரைவில் முன்வைக்குமாறு அரசிடம் கோருகின்றோம்-என்றார். (அ)

# பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என்ற போர்வையில் பண மோசடி!

கொழும்பு, மார்ச் 25

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என்று காட்டிக்கொண்டு சில நபர்கள் பண மோசடியில் ஈடுபட்டு வருவதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவும், இதுபோன்ற மோசடி செய்பவர்களிடம் சிக்காமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்க செயலாளர் சமில் முத்துக்குட வலியு றுத்தினார்.

இதற்கிடையில், பண்டிகைக் காலத்திற்கான சந்தைச் சோதனைகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளதாக அவர் கூறினார். (அ)

# 4 பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்ற உத்தரவு

கொழும்பு, மார்ச் 25

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு உடன் அமுலாகும் வகையில் இடமாற்றம் மற்றும் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்குப் பொறுப்பாக இருந்த பிரதி பொலிஸ் மா அதிபர் டி.எம்.யு.எம். திசாநாயக்க, விசேட பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் பொறுப்பாக செயற்பட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.ஏ.ஜே. விஷாந்த, பிரதமரின் பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு, மேல திகமாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவருக்கு பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

# சகல தொழிற்சங்கங்களுடனும் இணைந்து போராட நாம் தயார்!

## கூறுகிறார் ஜோசப் ஸ்டாலின்

கொழும்பு, மார்ச் 25

சம்பள முரண்பாடு தொடர்பில் அதிபர் ஆசிரியர் சங்கம் மாத்திரமல்ல ஏனைய தொழிற் சங்கங்களுடனும் கலந்துரையாடி கடுமையான தொழிற் சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயாராக உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

சம்பள முரண்பாடு தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பாராளுமன்றத்தில் ஜனாதிபதி இதுவரை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னரும் அவர் எவ்வித கருத்துகளையும் முன்வைக்கவில்லை.

ஆகையால் ஒட்டுமொத்த ஆசிரியர் துறையும் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளது.

கடந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தபோதும் எமது சம்பள முரண்பாட்டுக்கு தீர்வினை வழங்குமாறு நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். எனினும் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கமும் எமது பிரச்னைகள் தொடர்பில் கவனம் செலுத்தியதாக தெரியவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவியை பெற்றுக் கொண்டதன் பின்னர் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கான சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாம் அதற்கு எதிராக எவ்வித கருத்துகளையும் முன்வைக்கப் போவதில்லை. எனினும் அதிபர் ஆசிரியர் குறித்து கவனத்தில் கொண்டிருக்கலாம் என்பதே எமது கோரிக்கை.

ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு, அடிப்படை சம்பளம் உள்ளிட்ட பல பிரச்னைகள் தொடர்பில் எமது சங்கம் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியுள்ளது.

அவை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காது வரவு - செலவுத் திட்டத்துக்கு பாராளுமன்ற அங்கீகாரத்தை பெற்றுள்ளனர். எமது சங்கத்தில் இருந்த ஆசிரியர்களும் பாராளுமன்றத்தில் உள்ளனர்.

எனினும் அவர்கள் இது குறித்து எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அதிபர் ஆசிரியர் சங்கம் மாத்திரம் அல்ல ஏனைய தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடி கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராக உள்ளோம்-என்றார். (அ)

# புத்தகப்பையின் சுமை அதிகரிப்பால் மாணவர்களுக்கு உடல்நலப் பிரச்னை!

## வைத்தியர்கள் சங்கக் கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 25

பாடசாலை மாணவர்களின் புத்தகப்பைகளின் சுமை அதிகரிப்பால் மாணவர்கள் மத்தியில் பல உடல்நலப் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்கள் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அளவுகோல்களின்படி, ஒரு புத்தகப்பையின் சுமை மாணவர் ஒருவரின் நிறையிலிருந்து 15 முதல் 20 சதவீதம் வரை இருக்க வேண்டும்.



குறித்த பிரச்னை தொடர்பில் அவ்வப்போது விவாதங்கள் நடத்தப்பட்டாலும், சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகிய வற்றால் உரிய நடவடிக்கையை எடுக்க முடியவில்லை.

இதன் காரணமாக, பாடசாலை மாணவர்களிடையே முதுகுத்தண்டு வலி, தலைவலி ,கழுத்து வலி மற்றும் நரம்பு தொடர்பான கோளாறுகள் போன்ற பிரச்னைகள் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் குறித்த பிரச்னையை உடனடியாக தீர்க்க வேண்டும் எனவும்,

ஒரு நாளைக்கு பாடசாலைக்கு எடுத்துச் செல்லவேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை யைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

# ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 25

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி **292 ரூபாய் 40 சதம்,** விற்ப னைப் பெறுமதி **300 ரூபாய் 91 சதம்.**

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி **376 ரூபாய் 44 சதம்,** விற்பனைப் பெறுமதி **390 ரூபாய் 64 சதம்.**

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி **314 ரூபாய் 82 சதம்,** விற்பனைப் பெறுமதி **327 ரூபாய் 57 சதம்.**

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி **328 ரூபாய்,** விற்பனைப் பெறுமதி **343 ரூபாய் 47 சதம்.**

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி **202 ரூபா 52 சதம்,**

விற்பனைப் பெறுமதி **211 ரூபாய் 16 சதம்.**

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி **181 ரூபாய் 72 சதம்,**

விற்பனைப் பெறுமதி **191 ரூபாய் 11 சதம்.**

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி **217 ரூபாய் 7 ரூபாய்,**

விற்பனைப் பெறுமதி **226 ரூபாய் 83 சதம்.**

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி **1 ரூபாய் 94 சதம்,** விற்பனைப் பெறுமதி **2 ரூபாய் 1 சதம்** என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்கொடை என நிதி மோசடி தலதா மாளிகை எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 25
எதிர்வரும் கண்டி, ஸ்ரீ தலதா மாளிகை ஆலய உற்சவத்துக்காக நன்கொடைகள் கோரி சமூக ஊடகங்களில் பரவலாக பரப்பப்படும் செய்தி குறித்து விகாரை நிர்வாகம் ஒரு அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது.

அதில், இவ்வாறு சமூக ஊடகங்களில் பரப்பப்படும் செய்தியானது முற்றிலும் தவறானது என தலதா மாளிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையின்படி-விகாரை உற்சவத்துக்கு தேவையான அனைத்து வசதிகளும் அரசாங்கத்துடன் இணைந்து ஸ்ரீ தலதா மாளிகையால் வழங்கப்படுகின்றன.

எந்தவொரு தனிநபர், குழு அல்லது அமைப்பும் அதன் சார்பாக நிதி சேகரிக்கவோ அல்லது தொடர்புடைய நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ அதிகாரம் அளிக்கவில்லை என்பதை மாளிகை வலியுறுத்தியது.

இதுபோன்ற தவறான செய்திகளைப் புறக்கணிக்கவும், துல்லியமான தகவல்களுக்கு தலதா மாளிகையின் அதிகாரப்பூர்வ தகவல்தொடர்புகளை மட்டுமே நம்பியிருக்கவும் பொதுமக்களை கேட்டுக்கொள்கிறோம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## நாணய நிதிய தேவைக்கமையவே இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டம்!

### அரசை சாடுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 25

**சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கமையவே இவ்வாண்டுக்கான வரவு - செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.**



அம்பாந்தோட்டை பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராகவே நாம் வாக்களித்தோம்.

அதிலுள்ள வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது நடைமுறை சாத்தியமானதா என்பது சந்தேகத்துக்கிடமானது.வரி வருமானம் மற்றும் கடன் பெறுவதைத் தவிர அரசாங்கத்திடம் வேறு எந்த மாற்றுத்திட்டமும் இல்லை.

தொழில் வாய்ப்பின்மை உட்பட நாட்டிலுள்ள எந்தவொரு பிரதான பிரச்சனைக்கும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தீர்வு முன்வைக்கப்படவில்லை.

மாறாக முற்று முழுதாக சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கமையவே இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

அரச நிர்வாகம் தொடர்பில் அரசாங்கம் இன்னும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களுக்கு பாராளுமன்றத்துக்குள் பொய் கூறும் உரிமை நீக்கப்படவேண்டும்.

பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாக இதற்கான யோசனையையும் முன்வைப்பதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்.கிராம மட்டத்தில் பொதுஜன பெரமுன மிக வேகமாக பலமடைந்து வருகிறது. கடந்த காலங்களில் எம்மிலிருந்து பிரிந்தவர்கள் மீண்டும் கட்சியில் இணைகின்றனர்.நாம் மக்களிடம் பொய் கூறி அவர்களை ஏமாற்றவில்லை.நாம் ஒரே கொள்கையைப் பின்பற்றி வருகின்றோம்.சந்தர்ப்பவாத அரசியலுக்காக நாம் எமது கொள்கைகளை மாற்றிக்கொள்ளவில்லை.கட்சி ஆதரவாளர்கள் தற்போது அதை புரிந்து கொண்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக மீண்டும் கட்சியை உயர் நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது-என்றார். (அ)

## உள்ளூராட்சித் தேர்தல் 6 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, மார்ச் 25
எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு முன்னதாக, நேற்று முன்தினம் நாட்டின் நான்கு பகுதிகளிலிருந்து தேர்தல் தொடர்பான ஆறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக பொலிஸாருக்கு 06 முறைப்பாடுகள் கிடைத்தன. அதே நேரத்தில் இந்த காலகட்டத்தில் தேர்தல் வன்முறை தொடர்பான எந்த முறைப்பாடுகளும் பதிவாக வில்லை.

மாத்தளையில் மூன்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் வேட்பாளர்களின் படங்கள் கொண்ட சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் அரசியல் கட்சிகளின் கொடிகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

கெப்பிற்றிக்கொல்லாவ பகுதியில் உலர் உணவு விநியோகம் தொடர்பாக ஒரு முறைப்பாடும்பதிவாகியுள்ளது.

பொலனறுவையில் உள்ள ஒரு பகுதியில் புதிய தெருவிளக்குகள் பொருத்தப்படுவதாகவும், மொனராகலையில் வேட்பாளரின் படம் பொறிக்கப்பட்ட பதாகைகள் இருப்பதாகவும் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. (அ)

## சிக்குன்குனியா தீவிரம்!

கொழும்பு, மார்ச் 25
சில வருடங்களின் பின்னர் கொழும்பு மற்றும் கோட்டைப் பகுதிகளில் சிக்குன்குனியா நோய் பரவல் அதிகமாக பதிவாகி வருவதாக சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

நுளம்புகள் பெருகும் இடங்களை முடிந்தவரை அழிப்பதன் மூலம் மட்டுமே சிக்குன்குனியா பரவுவதை கட்டுப்படுத்த முடியும் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

"சிக்குன்குனியா" நோய் தற்போது ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியக் கண்டங்களிலும் பசுபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல் தீவுகளிலும் பரவும் நோயாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சிக்குன்குனியா வைரஸால் பாதிக்கப்பட்ட நுளம்பு கடித்தால் மனிதர்களுக்கும், பாதிக்கப்பட்ட பயணிகளிடமிருந்து பாதிக்கப்படாத பகுதிகளுக்கும் பரவுகிறது. இலங்கையில் மீண்டும் சிகன்குனியா பரவும் சூழல் ஏற்பட்டுள்ளதாக சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## 50 இலட்சம் ரூபாய் ஒப்பந்தத்தில் நடத்தப்பட்ட இரட்டைக் கொலை!

கொழும்பு, மார்ச் 25
மாத்தறை தேவேந்திரமுனை இரட்டைக் கொலை சம்பவம் 50 இலட்சம் ரூபாய் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், இதற்காக இரண்டு துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண் உட்பட 4 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை தடுப்பு காவலில் வைத்து விசாரிப்பதற்கு மாத்தறை பதில் நீதவான் அனுமதி வழங்கினார்.

சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இந்தக் கொலை 50 இலட்சம் ரூபாய் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் இரு தரப்பினருக்கு இடையில் நிலவி வந்த மோதலின் விளைவாக இந்த கொலைகள் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளது. (அ)

## பாலியல் குற்றங்கள்,வீட்டு வன்முறை இலங்கையில் வெகுவாக அதிகரிப்பு!



கொழும்பு, மார்ச் 25
இலங்கையில் பாலியல் வன்கொடுமை குற்றங்கள் மற்றும் வீட்டு வன்முறைகள் ஆபத்தான முறையில் அடிக்கடி பதிவாகி வருவதாக குழந்தைகள் மற்றும் பெண்கள் பணியகத்தின் ப்ரதிப் பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜெயசுந்தர கூறினார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு அளித்துள்ள செவ்வியின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 2024ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் வழக்குகள் 2,252 பதிவாகியுள்ளதாகவும், அதில் அதிக எண்ணிக்கையிலான சம்பவங்கள் வீட்டில் (1,420 வழக்குகள்) நடந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொது போக்குவரத்து (261 வழக்குகள்), ஒன்லைன் தளங்கள் (192 வழக்குகள்), சாலைகள் (117 வழக்குகள்), பணியிடங்கள் (41 வழக்குகள்), பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி வகுப்புகள் (20 வழக்குகள்), மத இடங்கள் (9 வழக்குகள்) மற்றும் பல்வேறு இடங்கள் (192 வழக்குகள்) ஆகியவை பிற இடங்களில் அடங்கும்.

பரவலான குறைவான அறிக்கையிடல் காரணமாக அந்த புள்ளிவிவரங்கள் பிரச்னையின் உண்மையான அளவைக் குறைவாகக் குறிக்கின்றன என்றும் அவர் கூறினார்.

பாலியல் துன்புறுத்தலுக்கு அப்பால், வீட்டு வன்முறை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. இது தொடர்பில் ஆண்டுதோறும் சுமார் 130,000 புகார்கள் பதிவு செய்யப்படுகின்றன.

அத்துடன், பாலியல் துன்புறுத்தல் மற்றும் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான விசாரணைகளை நடத்துவதற்கும் தேவையான ஆதரவை வழங்குவதற்கும் சட்ட அமுலாக்க அதிகாரிகள் உறுதி பூண்டுள்ளனர் என்று அவர் உறுதியளித்துள்ளார். (அ)

## இலங்கை - அவுஸ்திரேலிய அதிகாரிகளின் உயர்மட்ட பேச்சுவார்த்தை கன்பராவில்!

கொழும்பு, மார்ச் 25
இலங்கைக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான 05 ஆவது சுற்று சிரேஷ்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தை மற்றும் 03 ஆவது மூலோபாய கடல்சார் உரையாடல் இன்று முதல் நாளை வரை கான்பராவில் உள்ள ஆஸ்திரேலியாவின் வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறையில் நடைபெறவுள்ளது.

இந்த இரண்டு கூட்டங்களுக்கும் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி யசோஜா குணசேகர மற்றும் ஆஸ்திரேலியாவின் வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறையின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிரிவின் முதல் உதவிச் செயலாளர் திருமதி சாரா ஸ்டோரி ஆகியோர் இணைந்து தலைமை தாங்குவார்கள்.

அரசியல் ஈடுபாடு, பொருளாதார கூட்டாண்மை, கடல்சார் ஒத்துழைப்பு, மேம்பாட்டு கூட்டாண்மை, பாதுகாப்பு, கல்வி, சுற்றுலா மற்றும் மக்களிடையேயான ஈடுபாடு உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு உறவுகள் குறித்து இந்த ஆலோசனைகள் விவாதிக்கப்படும்.

இரு நாடுகளுக்கும் ஆர்வமுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்கள். (அ)

## தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 25
இலங்கையின் தேயிலை ஏற்றுமதி கடந்த பெப்ரவரி மாதத்தில் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இதன்படி கடந்த பெப்ரவரி மாதத்தில் மொத்தமாக 20.40 மில்லியன் கிலோ கிராம் தேயிலை மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 39.77 மில்லியன் கிலோ கிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதால், கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடும்போது 1.30 மில்லியன் கிலோ கிராம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய காலப்பகுதியில் இலங்கையிலிருந்து அதிகளவில் தேயிலை இறக்குமதி செய்த நாடாக ஈராக் பதிவாகியுள்ளது. அத்துடன் ரஷ்யா இரண்டாவது இடத்தி லும், லிபியா 3ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் தே.ம.ச. மகத்தான வெற்றி பெறும்

## பிரதியமைச்சர் அருண் நம்பிக்கை



திருகோணமலை, மார்ச் 25

**பாராளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றி மகத்தானது. அதேபோன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் வெற்றி பெறும் என்று வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.**

திருகோணமலை மாநகர சபை மற்றும் கிண்ணியா நகர சபை உள்ளிட்ட சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. இதன்பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது பிரதியமைச்சர் மேலும் கூறுகையில்,

கடந்த பாராளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றி மகத்தானது. அதேபோன்ற ஒரு வெற்றியை, இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.


ஆட்சி நிர்வாகத்தை, வினைத்திறனாக கொண்டு செல்லும் ஒரு ஜனாதிபதி, ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு சிறப்பான பாராளுமன்றம், அதேபோன்று நல்ல முற்போக்கான செயல்திறன் கொண்ட ஒரு அமைச்சரவை ஆகியன தற்போது நாட்டில் அமையப் பெற்றிருக்கின்றது.

கடந்த காலங்களில், ஊழல், இலஞ்சம் மோசடி போன்றவற்றுக்கு தலைமை தாங்கும் அமைப்பாக உளளூராட்சி சபைகள் திகழ்ந்தன.

இந்த நிலையில், தேசிய ரீதியில் கிராமங்களை வெற்றி கொண்டு, ஆட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்குபற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு இந்தத் தேர்தலை நாங்கள் வாய்ப்பாக பயன்படுத்துவோம்.

மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இந்த மாவட்டத்தில், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் தேசிய மக்கள் சக்தி வெற்றி கொள்வதற்குத் தேவையான உத்திகளை கையாண்டிருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# மூதூரில் நேற்று அதிகாலையும் காட்டு யானைகள் அட்டகாசம்



மூதூர், மார்ச் 25

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச சபையின் கீழ் உள்ள மல்லிகைத்தீவு உப அலுவலக வளாகத்துக்குள் நேற்று அதிகாலை நுழைந்த காட்டு யானைகள் பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

பயன்தரும் வாழை மரங்கள், தென்னை மரங்களை காட்டு யானைகள் துவம்சம் செய்துள்ளன.

தற்போது, நெல் அறுவடை நிறைவடைந்துள்ள நிலையில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இதனால், யானை பாதுகாப்பு வேலி அமைத்துத்தர வேண்டுமெனவும் இல்லாவிடில் மக்களுக்கு உயிர்ச் சேதங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

எனவே, இந்த விடயத்தில் துறைசார் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# திருகோணமலையில் 103 அரசியல் கட்சிகள் போட்டியிடத் தகுதி!

திருகோணமலை, மார்ச் 25

எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை கையளிக்கும் காலம் நிறைவடைந்துள்ள நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் 13 உளளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக 126 அரசியல் கட்சிகளும், 12 சுயேச்சைக் குழுக்களும் தமது வேட்பு மனுக்களை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் கையளித்திருந்தன.

இதில், 23 அரசியல் கட்சிகளினதும், 03 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு 103 அரசியல் கட்சிகளினதும், 03 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஹேமந்தகுமார தெரிவித்தார். (எ)



இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றி உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை நினைவு கூறும் தேசிய பொலிஸ் வீரர்கள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் முன் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் கடந்த 21 ஆம் திகதி கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தர மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அத்தோடு, பொலிஸ் உத்தியோகத்தர்களும் அஞ்சலி செலுத்தினர்.

# கட்டாக்காலி மாடு அறுக்கப்பட்டு ஏழைகளுக்கு வழங்கப்படுமாம்!

கல்முனை, மார்ச் 25

வீதியில் மக்களின் போக்குவரத்தை சீர்குலைக்கும் கட்டாக்காலி மாடுகள் உடனடியாக பிடிக்கப்பட்டு ஏழைகளுக்கு அறுத்து பங்கிடவேண்டிய நிலைமை ஏற்படும் என நாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் நளீர் அபூபக்கர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நாவிதன் வெளி பிரதேச சபைக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் அம்பாறை மாவட்டம் மத்தியமுகாம் பகுதியில் உள்ள அவரது அலவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-01)



# அலிக்கம்பையில் கலாசார நிகழ்வு

கல்முனை, மார்ச் 25

ஜீ. ஐ. செட். அமைப்பின் நிதி உதவி மூலம் விழுது நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட ஐடோ இளைஞர்களால் நடத்தப்பட்ட அலிக்கம்பை தெலுங்கு சமூகத்தினருடன் பல் சமயத்தவர் இணையும் கலாசார மைய நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அலிக்கம்பை கிராமத்தைச் சேர்ந்த மக்களுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மும்மதங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், சமயத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

மும்மதங்களின் கலாசார விழுமியங்கள், பண்பாடுகள் தொடர்பான கருத்தாடல்கள் நடைபெற்றதுடன் மும்மதங்களினதும் உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பான நடைமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு அவரவர்களிடையே உணவுப் பரிமாற்றங்களும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில், அலிக்கம்பை பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டதுடன் மும்மதங்களைச் சேர்ந்த தலைவர்களும் இது தொடர்பில் தங்களது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

இன ஒற்றுமையையும் சமய நல்லிணக்கத்தையும் பரப்பும் வகையில் இந்த அமைப்பு ஒவ்வொரு மாவட்டங்களிலும் கடந்த காலங்களில் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (எ)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் திருகோணமலை மாவட்ட செயலகம், திருகோணமலை மாவட்ட அறநெறிகள் சங்கம் இணைந்து நடத்திய காரைக்கால் அம்மையார் மற்றும் திருவள்ளுவர் குருபூசை தின நிகழ்வு திருகோணமலை விஸ்வநாத சுவாமி (சிவன்) ஆலய அன்னதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (எ)

# பிரதேச அமைப்பாளர் அமீர் இடைநிறுத்தம்!

கல்முனை, மார்ச் 25

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கான அமைப்பாளர் பதவிலிருந்தும், கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் ஏ. கே. அமீர் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். சுபைர்தீன் அறிவித்துள்ளார்.

உளளூராட்சி மன்றத் தேர்தலில்-அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனித்து போட்டியிடும் நிலையில், கட்சியின் அமைப்பாளராக செயல்பட்ட அமீர் கட்சியின் தீர்மானத்தை மீறி, சுயேச்சைக்குழு வேட்பாளராக வேட்புமனுவைத் தாக்கல் செய்தமையால் அவர் அமைப்பாளர் பதவியிலிருந்தும் கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் அதிரடி தாக்குதல் ஹமாஸ் மூத்த தலைவர் பலி

காஸா, மார்ச்.25

**காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் சலாஹ் அல் பர்தாவில் உயிரிழந்தார்.**

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தியது. இந்தப் போரில் காஸா முனையில் இதுவரை 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது. பணயக் கைதிகளில் சிலர் ஹமாஸ் அமைப்பினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கடந்த சில வாரங்களாக போர் நிறுத்தம் அமுலில் இருந்தது.

அதேவேளை, ஹமாஸ் அமைப்பின் பிடியில் 59 பேர் பணயக் கைதிகளாக உள்ளனர். இதில் 25இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, போர் நிறுத்தத்தின் 2ஆம் கட்டம் அமுல்படுத்தப்படவில்லை. எஞ்சிய பணயக் கைதிகளை உடனடியாக ஒப்படைக்கும்படி இஸ்ரேலும், காஸாவிலிருந்து வெளியேறும்படி ஹமாஸும் வலியுறுத்தியதால் 2ஆம் கட்ட போர் நிறுத்தம் தோல்வியடைந்தது. போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்வியடைந்ததையடுத்து காஸா முனை மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளது.

இதேவேளை, காஸாவிலிருந்து இஸ்ரேல் மீதும் ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானிலிருந்து ஹிஸ்புல்லா அமைப்பினரும், ஏமனின் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும் இஸ்ரேல் மீது ரொக்கெட், ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது.



இந்த நிலையில், காஸா முனையின் கான் யூனிஸ், ரபா உட்பட பல்வேறு பகுதிகளில் இஸ்ரேல் நேற்று அதிரடி வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அத்தோடு, ஹமாஸ் ஆயுதக் குழுவின் மூத்த தலைவர் சலாஹ் அல் பர்தாவில் கொல்லப்பட்டார். சலாஹ் அல் பர்தாவில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு மூத்த தலைவராக செயல்பட்டு வந்தார். கான் யூசில் உள்ள முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சலாஹ்வின் மனைவியும் கொல்லப்பட்டதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது. (எ)

# உக்ரைனில் ரஷ்யா ட்ரோன் தாக்குதல்!

## மூவர் உயிரிழப்பு

கீவ், மார்ச்.25

உக்ரைனில் ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் மூவர் பலியாகினர்.

ரஷ்யா - உக்ரைன் இடையே போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிரம் காட்டி வருகிறார். அந்த வகையில் அமெரிக்கா முன்மொழிந்த 30 நாள் போர் நிறுத்தத்துக்கு ரஷ்யா - உக்ரைன் ஆகிய இருநாடுகளுமே சம்மதம் தெரிவித்தன. இது தொடர்பில் ரஷ்யா - உக்ரைன் இடையே சவுதி அரேபியாவில் பேச்சுகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், உக்ரைன் தலைநகர் கீவை குறிவைத்து ரஷ்யா நேற்று முன்தினம் சரமாரியாக ட்ரோன் தாக்குதல் நடத்தியது. இதில், அடுக்குமாடி குடியிருப்பு கட்டடங்கள் உட்பட பல கட்டடங்கள் சேதமடைந்தன. இந்தத் தாக்குதலில் 5 வயது சிறுமி உட்பட மூவர் பலியாகினர். மேலும், 10 பேர் படுகாயமடைந்தனர். (எ)

# தட்டம்மை நோயால் 17 குழந்தைகள் பலி!

கராச்சி, மார்ச்.25

பாகிஸ்தானில் 2 மாதங்களில் தட்டம்மை நோயால் 17 குழந்தைகள் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை தட்டம்மை பாதிப்பு பற்றி சுகாதாரத் துறை கணக்கெடுப்பு நடத்தியது. இதில், 1,100 இற்கும் மேற்பட்டோர் பாதிப்புக்குள்ளானது தெரியவந்தது. இதில், அதிகளவாக காயிர்பூர் மாவட்டத்தில் 10 குழந்தைகள் பலியாகினர்.

கராச்சியில் கடந்த 2 மாதங்களில் மொத்தம் 550 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கராச்சியின் கிழக்கு மாவட்டத்தில் 5 குழந்தைகள் பலியாகினர். சுக்கூர் மற்றும் ஜகோபாபாத் மாவட்டங்களில் தலா ஒரு குழந்தை என பாகிஸ்தானில் 17 உயிரிழப்புகள் ஏற்பட்டன.(எ)

# கனடாவில் ஏப்ரல் 28 பாராளுமன்ற தேர்தல்

## பிரசாரத்தை ஆரம்பித்தார் பிரதமர்


ஒட்டாவா, மார்ச். 25

கனடா பாராளுமன்றத் தேர்தல் ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கனடாவில் 2015ஆம் ஆண்டு முதல் பிரதமராக செயல்பட்டு வந்த ஜஸ்டின் ட்ரூடோ கடந்த ஜனவரி மாதம் தனது பதவியை இராஜினாமா செய்தார். இதையடுத்து, கனடா மத்திய வங்கியின் முன்னாள் தலைவரான மார்க் கார்னி புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். அவர் கடந்த 14ஆம் திகதி கனடாவின் 24ஆவது பிரதமராக பதவியேற்றார்.

தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் வரும் ஒக்ரோபர் மாதம் வரை உள்ளது. இருப்பினும், பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு முன்கூட்டியே தேர்தலை நடத்த மார்க் கார்னி அழைப்பு விடுத்தார்.

இதன்படி, அடுத்த மாதம் (ஏப்ரல்) 28ஆம் திகதி கனடா பாராளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலுக்கு



இன்னும் சில வாரங்கள் இருக்கும் நிலையில் பிரதமர் மார்க் கார்னி பிரசாரத்தை தொடங்கியுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்பு நடவடிக்கைகளால் கனடா - அமெரிக்கா இடையே சிக்கலான வர்த்தக உறவு நீடிக்கும் நிலையில் அதற்கான தீர்வுகளை முன்வைத்து பிரதமர் மார்க் கார்னி பிரசாரம் செய்வார் என அரசியல் நிபுணர்கள் கணித்துள்ளனர். (எ)

# நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் பணம் கைப்பற்றப்பட்டது உறுதி

புதுடில்லி, மார்ச்.25

இந்தியாவின் டில்லியில் உயர் நீதிமன்ற நீதிபதி வீட்டில் எரிந்த நிலையில் பெருந்தொகை பணம் கைப்பற்றப்பட்டது தொடர்பான படங்கள், வீடியோ எனபனவற்றை உச்ச நீதிமன்றம் நேற்று வெளியிட்டுள்ளது. இதன் மூலம், நீதிபதியின் வீட்டில் பணம் கைப்பற்றப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் அரசு இல்லம், துக்ளக் வீதியில் உள்ளது. இங்கு கடந்த 14ஆம் திகதி இரவு திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்ததும், விரைந்து சென்ற பொலிஸாரும், தீயணைப்பு படையினரும் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதற்கிடையே, அங்குள்ள அறையில் கட்டுக்கட்டாக பணம் இருந்தது குறித்து அரசுக்கு அதிகாரிகள் தகவல் கொடுத்தனர். உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணாவுக்கு இதுபற்றி 15ஆம் திகதி தகவல் கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, பணம் கைப்பற்றப்பட்டது தொடர்பில் நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் விளக்கத்துடன் அறிக்கை தாக்கல் செய்யுமாறு டில்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா உத்தரவிட்டார்.

இதுகுறித்து நீதிபதி யஷ்வந்த் வர்மா தனது விளக்க கடிதத்தில், "அரசு இல்லத்தில் நாங்கள் பயன்படுத்தி வரும் இடத்திலிருந்து பணம் கைப்பற்றப்படவில்லை என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்தப் பணம் குறித்து எனக்கோ, என் குடும்பத்தாருக்கோ எதுவும் தெரியாது. அந்தப் பணத்துடன் எங்களுக்கு எந்தவித தொடர்பும் இல்லை. தவிர, அன்று இரவு எடுத்ததாக கூறப்படும் பணம் எனது உறவினர்களிடமோ, பணியாளர்களிடமோ காட்டப்படாதது துரதிர்ஷ்டவசம்" என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

வெளிநாட்டு உதவி நிறுத்தம்

# அமெரிக்காவிடம் நிதியை திரும்ப கேட்கும் நாடுகள்

வாஷிங்டன், மார்ச்.25

நோர்வே, சுவீடன் மற்றும் நெதர்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகள் கூட்டாக வழங்கிய 15 மில்லியன் டொலரை (இலங்கை மதிப்பில் 442 கோடி ரூபாய்) திரும்ப வழங்குமாறு அமெரிக்காவிடம் கோரியுள்ளன.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றவுடனே, அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகளை நிறுத்தி வைத்தார். இந்தப் பணிகளை செய்யும் அமெரிக்க நிறுவனத்துக்கு தடை விதித்தார். ஆபிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு உதவிகளை செய்து வந்த அமெரிக்க நிறுவனத்துக்கு பல்வேறு ஐரோப்பிய நாடுகள் நன்கொடைகளை வழங்கி வந்தன.

ஆனால், இந்த உதவிகளை ட்ரம்ப் நிறுத்தியதால், தங்கள் பணத்தை திரும்ப வழங்குமாறு ஐரோப்பிய நாடுகள் கோரியுள்ளன. அந்தவகையில் நோர்வே, சுவீடன் மற்றும் நெதர்லாந்து நாடுகள் கூட்டாக வழங்கிய 15 மில்லியன் டொலரை (இலங்கை மதிப்பில் 442 கோடி ரூபாய்) திரும்ப வழங்குமாறு கோரியுள்ளன.

தாங்கள் வழங்கிய இந்தப் பணம் தேவைப்படும் நாடுகளுக்கு செலவிடப்படுமா? அல்லது திரும்பத் தரப்படுமா? என ட்ரம்ப் நிர்வாகத்தை கேட்டுள்ளன. எனினும், இது குறித்து அமெரிக்காவிடமிருந்து பதில் எதுவும் வழங்கப்படவில்லை.

இது குறித்து சுவீடன் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜூலியா லின்ட்ஹோம் கூறுகையில், "இது எங்களுக்கு ஒரு கவலையாக இருக்கிறது. வெளிநாட்டு உதவி நடவடிக்கைகளுக்கு பணம் வழங்கிய எங்கள் கூட்டாளிகள் அதற்கான பயனை பெற வேண்டும்"- என தெரிவித்தார். (எ)

# "ஓ.பி.எஸ்ஸை அ.தி.மு.க.வில் இணைக்கும் திட்டம் இல்லை"


சேலம், மார்ச்.25

அ.தி.மு.க. மிகச் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் இயக்கம். இன்றுவரை சசிகலா, டி.டி.வி., ஓ.பி.எஸ். ஆகியோரை அ.தி.மு.க.வில் இணைத்துக் கொள்ளும் திட்டம் எதுவும் இல்லை என்று பொதுச்செயலாளர் பழனிச்சாமி தெரிவித்தார்.

இந்தியாவின் சேலம் மாவட்டம் ஓமலூரில் உள்ள அ.தி.மு.க. புறநகர் மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு அரசியல் கட்சிகளிலிருந்து விலகிய 400இற்கும் மேற்பட்டோர், அ.தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பழனிச்சாமி கூறுகையில், "தமிழக அரசின் பட்ஜெட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்கான அறிவிப்பாக தான் பார்க்க முடிகிறது. தி.மு.க.வின் 4 ஆண்டு கால ஆட்சியில், சட்டம் ஒழுங்கு அடியோடு சீர்குலைந்து விட்டது. விலைவாசி கடுமையாக உயர்ந்துவிட்டது"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 4 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணி வெற்றி!

சென்னை, மார்ச் 25


மும்பைக்கு எதிரான போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் சென்னை அணி வெற்றி பெற்றது.

10 அணிகள் பங்கேற்றுள்ள 18ஆவது ஐ.பி.எல். திருவிழா தொடங்கியுள்ளது. இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 5 முறை சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 155 ஓட்டங்கள் எடுத்தது. சென்னை அணியில் சிறப்பாக பந்து வீசிய நூர் அகமது 4 விக்கெட்களும், கலீல் அகமது 3 விக்கெட்களும் எடுத்தனர். 156 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை அணி 19.1 ஓவரில் 6 விக்கெட்கள் இழந்து 158 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. சென்னை அணியில் ரச்சின் ரவீந்திரா 65, ருதுராஜ் 53, ரவீந்திர ஜடேஜா 17 ஓட்டங்கள் எடுத்தனர்.

இந்த போட்டியில் 23 பந்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் அரைச்சதம் விளாசினார்.

இதனிடையே முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணியின் தலைவர் சூர்யகுமார் யாதவை மின் னல் வேகத்தில் ஸ்டம்பிங் செய்து எம். எஸ். டோனி ஆட்டமிழக்கச் செய்தார். டோனியின் ஸ்டம்பிங்தான் இப்போது சமூக வலைத்தளங்களில் பரபரப்பாக பகிரப்பட்டும் கிரிக்கெட் ரசிகர்களால் வியந்தும் பேசப்பட்டும் வருகிறது. (எ)

## ஜோப்ரா ஆர்ச்சர் மோசமான சாதனை




ஹைதராபாத், மார்ச் 25

நடப்பு ஐ. பி. எல். தொடரில் ஜோப்ரா ஆர்ச்சர் மோசமான சாதனை படைத்துள்ளார். ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் ராஜஸ்தான் றோயல்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின.

ஹைதராபாத்தின் தொடக்க வீரர்களாக ட்ராவிஸ் ஹெட் மற்றும் அபிஷேக் சர்மா களமிறங்கினர். இதில் அபிஷேக் சர்மா 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து இஷான் கிஷன் களமிறங்கினர். ட்ராவிஸ் ஹெட் - இஷான் கிஷன் இணை அதிரடியாக ஆடியது. இந்த இணை ராஜஸ்தானின் பந்துவீச்சை அடித்து நொறுக்கியது. அதிரடியாக விளையாடிய இருவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர்.

இதில் ட்ராவிஸ் ஹெட் 67 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இஷான் கிஷன் சதம் அடித்து அசத்தினார். இறுதியில் ஹைதரபாத் அணி 20 ஓவர்களில் 286 ஓட்டங்கள் குவித்தது.

இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் 4 ஓவர்களில் விக்கெட் எடுக்காமல் 76 ஓட்டங்கள் கொடுத்தார். இதன் மூலம் அவர் ஐ. பி. எல். வரலாற்றில் மோசமான சாதனை ஒன்றை படைத்துள்ளார். அதாவது ஒரு ஐ.பி.எல். இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் விட்டுக்கொடுத்த வீரர் என்ற மோசமான சாதனையை ஜோப்ரா ஆர்ச்சர் படைத்துள்ளார். (எ)

## 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி

வெலிங்டன், மார்ச் 25



பாகிஸ்தானுக்கு எதிரான 4ஆவது ரி - 20 போட்டி யில் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி தொடரையும் கைப்பற்றி அசத்தியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில், 3 போட்டிக ளின் முடிவில் நியூசிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னி லையில் இருந்தது. இவ்விரு அணிகள் இடையிலான 4ஆவது ரி - 20 போட்டி மவுண்ட் மவுங்கானுயில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 220 ஓட்டங்கள் குவித்தது. நியூசிலாந்து தரப்பில் பின் ஆலென் 50 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக ஹாரிஸ் ரவுப் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 221 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணியினர், நியூசிலாந்தின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தனர். இறுதியில் பாகிஸ்தான் 16.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 105 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன் மூலம் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற நியூசிலாந்து தொடரையும் கைப்பற்றி அசத்தியது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக அப்துல் சமத் 44 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் ஜேக்கப் டப்பி 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி ரி - 20 போட்டி நாளை 26ஆம் திகதி வெலிங்டனில் நடைபெறுகிறது. (எ)

## உலக சாதனை படைத்தது சன்ரைசர்ஸ் ஹைதராபாத்


ஹைதராபாத், மார்ச் 25

ரி - 20 கிரிக்கெட்டில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி உலக சாதனை படைத்தது.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி அதிரடியாக ஆடி ஓட்டங்கள் குவித்தது. சிக்ஸர் மழை பொழிந்த ஹைதராபாத் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை மட்டும் இழந்து 286 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி சார்பில் இஷான் கிஷன் 106 ஓட்டங்களுடன் இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து 287 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் களம் கண்டது.

தொடக்கத்தில் விக்கெட்களை இழந்து தடுமாறிய ராஜஸ்தான் அணி, இறுதிக் கட்டத்தில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இருப்பினும் அந்த அணியால் 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 242 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதன் மூலம் 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணி வெற்றி பெற்றது. ராஜஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக துருவ் ஜூரெல் 70 ஓட்டங்கள் எடுத்தார். ஹைதராபாத் தரப்பில் சிமர்ஜித் சிங், ஹர்ஷல் பட்டேல் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இந்த நிலையில், இந்த ஆட்டத்தில் ஹைதராபாத் அணி உலக சாதனை ஒன்றை படைத்துள்ளது. அதாவது, உலகளவில் ரி - 20 கிரிக்கெட் போட்டியில் (சர்வதேசம், உள்ளூர் , ரி - 20 லீக்) ஓர் இன்னிங்ஸில் அதிக முறை 250 ஓட்டங்களுக்கு மேல் அடித்த ஒரே அணி என்ற சாதனையை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி படைத்துள்ளது. சன்ரைசர்ஸ் அணி ஓர் இன்னிங்ஸில் 4 முறை (287, 286, 277, 266) 250 ஓட்டங்களுக்கு மேல் அடித்துள்ளது. (எ)



## மியாமி ஓபின் ரென்னிஸ் கோகோ கப் முன்னேற்றம்



புளோரிடா, மார்ச் 25

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் 4ஆவது சுற்றுக்கு கோகோ கப் முன்னேறினார்.

இந்தத் தொடர் அமெரிக்காவின் புளோரிடா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான கோகோ கப், கிரீஸின் மரியா சக்காரியுடன் மோதினார்.

அனுபவம் வாய்ந்த இரு வீராங்கனைகள் சந்தித்ததால் ஆட்டத்தில் அனல் பறக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இந்த ஆட்டத்தில் 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் மரியா சக்காரியை எளிதில் வீழ்த்தி கோகோ கப் அபார வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் கோகோ கப் 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 இலங்கை படை அதிகாரிகள்...

ஜெயசூர்ய, இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயல்படும் ஒரு துணை இராணுவப் பிரிவான கருணா அம்மான் என்றும் அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகிய நால்வருமே இந்தத் தடைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த தடைகளில் சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகள் அடங்கும். மேலும் தமிழர்களுக்கு எதிராக குற்றங்களைச் செய்த இலங்கையர்கள் மீது வலுவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற பல வருட கோரிக்கைகளுக்குப் பிறகு இந்தத் தடை வந்துள்ளது.

"இலங்கையில் மனித உரிமைகளுக்கு இங்கிலாந்து அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. உள்நாட்டுப் போரின் போது நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்புக்கூறலைக் கோருவது உட்பட, அவை இன்று சமூகங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன" என்று இங்கிலாந்து வெளியுறவுச் செயலாளர் லாம்மி கூறினார்.

"பொறுப்பானவர்கள் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு தேர்தல் பிரசாரத்தின் போது நான் உறுதியளித்தேன். கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறப்படுவதை இந்த முடிவு உறுதி செய்கிறது."- என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் ஈடுபடுவதற்கான புதுப்பிக்கப்பட்ட உறுதிமொழியாக இங்கிலாந்து விவரிக்கும் நிலையில் இந்த நடவடிக்கை வந்துள்ளது. மனித உரிமைகள் சீர்திருத்தங்கள் குறித்து நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்றுவதை எதிர்நோக்கியுள்ளதாக இங்கிலாந்து கூறியதுடன், தேசிய ஒற்றுமை குறித்த சமீபத்திய அறிக்கைகளை வரவேற்றது.

ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, இந்தோ - பசுபிக் பகுதிக்கான இங்கிலாந்து அமைச்சர் கத்தரின் வெஸ்ட் , இலங்கை ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க, வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் வடக்கில் உள்ள தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்தார்.

சமூகங்கள் ஒன்றாக முன்னேற, கடந்த கால தவறுகளுக்கான ஒப்புதல் மற்றும் பொறுப்புக்கூறல் இருக்க வேண்டும், இதை இன்று அறிமுகப்படுத்தப்பட்ட தடைகள் பட்டியல்கள் ஆதரிக்கும் என்று இங்கிலாந்து வெளியுறவு அலுவலகம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குறிப்பாக 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் இறுதிக் கட்டங்களின் போது, இலங்கை இராணுவம் விரிவான உரிமை மீறல்களுக்கு ஆளாகியுள்ளது. ஐ.நா மற்றும் மனித உரிமைகள் அமைப்புகளின் விசாரணைகளில் பொது மக்கள் படுகொலைகள், கட்டாயமாக காணாமல் போதல்கள் மற்றும் பாலியல் வன்முறையின் பரவலான பயன்பாடு ஆகியவை விரிவாகக் காணப்படுகின்றன - இவை எதுவும் மூத்த இராணுவ அல்லது அரசியல் பிரமுகர்கள் மீது உள்நாட்டு வழக்கு தொடர வழிவகுத்ததில்லை.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட இலங்கையர்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்த மூன்றாவது நாடாக பிரிட்டன் இப்போது மாறியுள்ளது.

58ஆவது படைப்பிரிவின் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா, ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களில் மருத்துவமனைகள் மீது தொடர்ச்சியான குண்டுவீச்சு, பரவலான பாலியல் வன்முறை, சித்திரவதை மற்றும் சரணடைந்த தமிழர்களின் மரண தண்டனை ஆகியவற்றை மேற்பார்வையிட்டார்.

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட ஆயுத மோதலின் போது, 2005 முதல் 2009 வரை இலங்கையின் கடற்படைத் தளபதியாக வசந்த கரன்னகொட பணியாற்றினார். 2019 ஆம் ஆண்டில், பெரும்பாலும் தமிழர்களான 11 பேர் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் 14ஆவது சந்தேக நபராக அவர் பெயரிடப்பட்டார்.

ஜகத் ஜெயசூர்யா இலங்கை இராணுவத்தின் 19ஆவது தளபதியாக பணியாற்றினார் மற்றும் ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களில் வடக்கு மாகாணத்தில் நடந்த கொடூரமான தாக்குதலை மேற்பார்வையிட்டார். அவரது நடவடிக்கைகள் சித்திரவதை, பாலியல் வன்முறை, பொதுமக்கள் மீதான இலக்கு தாக்குதல்கள், மருத்துவமனைகள் மீது ஷெல் தாக்குதல் மற்றும் சுருக்கமான மரண தண்டனைகள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டன. பிரேசில், கொலம்பியா, பெரு, ஆர்ஜென்ரீனா, சிலி மற்றும் சூரினாம் ஆகிய நாடுகளில் பணியாற்றும் முக்கியமான இராஜதந்திர பதவிகளை அவருக்கு வெகுமதியாக வழங்கியுள்ளனர்.

ஒரு காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் மூத்த நபராக இருந்த விநாயகமூர்த்தி முரளிதரன், 2004 ஆம் ஆண்டு கட்சியை விட்டு வெளியேறி, கருணா குழுவை உருவாக்கினார். இது கிழக்கில் கடத்தல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் குழந்தை ஆட்சேர்ப்பு ஆகியவற்றில் குற்றம் சாட்டப்பட்ட அரசாங்க ஆதரவு துணை இராணுவ அமைப்பாக செயல்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுகள் இருந்தபோதி லும், மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத் தில் முரளிதரன் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஒரு பத்திரிகையாளராக இருப்பதற்கு உலகின் மிகவும் ஆபத்தான இடங்களில் இலங்கை ஒன்றாகும். தமிழ் ஊடகவியலாளர்கள் குறிப்பாக அச்சுறுத்தலில் உள்ளனர். ஆயுத மோதலின் போதும் அதற்குப் பின்னரும் இலங்கை அரசு அல்லது அதன் துணை இராணுவத்தினரால் குறைந்தது 41 ஊடக ஊழியர் கள் கொல்லப்பட்டதாக அறியப்படுகிறது.

அபாயங்கள் இருந்தபோதிலும், எங்கள் குழு, தமிழர் தாயகத்தில், தீவு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நிகழ்வுகள் குறித்த விரிவான மற்றும் துல்லியமான அறிக்கையை வழங்குவதற்கும், தமிழர் பார்வையில் இருந்து நிபுணர் பகுப்பாய்வு மற்றும் நுண்ணறிவை வழங்குவதற்கும் உறுதிபூண்டுள்ளது என்று இங்கிலாந்து வெளியுறவு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## ரணில், மகிந்த...

வேண்டிய தேவை இல்லை. இவ்வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பெரும் வெற்றியடைவதை தடுக்க, வங்குரோத்து அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து பொய்யான செய்திகளை பரப்பி வருவதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட வேட்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த அரசாங்கம் செய்ததையே மீண்டும் செய்வது முறைமை மாற்றமல்ல. மக்களை ஏமாற்ற ஐக்கிய மக்கள் சக்தி அச்சப்படுகின்றது. பொய்யை நம்ப வைப்பதற்கும், மக்களை அரசியல் ரீதியாக ஏமாறுவதற்கும் நாம் பயப்படுகிறோம். ஐக்கிய மக்கள் சக்தியானது முடிவுகளை எடுக்கும் விடயத்தில் சரியான முடிவுகளையே எடுத்து வருகின்றது. இன்று அரசாங்கமானது

பல்வேறு தலைப்புச் செய்திகளை தூக்கிப் பிடித்துக் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தி பல்வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர முயற்சிக்கின்றது என போலியான செய்திகளை கட்டமைத்து வருகிறது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் அத்தகையதொரு தீர்மானத்துக்கு வராது. நாம் இவர்களோடு இணையோம். ஐக்கிய மக்கள் சக்தி முதன்முறையாக உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதாலயே இவ்வாறான செய்திகளை வெளியிடுகிறார்கள் - என்றார். (அ)

## அமெரிக்க...

அமைச்சர் விஜித ஹேரத் அடுத்த வாரம் அமெரிக்கா பயணமாக உள்ளதாக வெளியான செய்தியில் உண்மை இல்லை என அமெரிக்கத் தூதுவர் மனோ கணேசனிடம் கூறியுள்ளார்.

இலங்கை பொருட்களை அதிகமாகக் கொள்வனவு செய்யும் நாடாக அமெரிக்கா உள்ளதாக ஜூலி சங் கூறியுள்ளார்.

இலங்கைக்கு சார்பாக இருக்கும் இந்த வர்த்தகம் தொடர்பில், அமெரிக்காவிலிருந்து அதிகமான பொருட்களை இலங்கை வாங்க வேண்டும் என அமெரிக்காவின் புதிய டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் எதிர்பார்க்கலாம் என அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

குறிப்பாக அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் ஆடை ஏற்றுமதி பொருட்களுக்கான பருத்தி ஆடை மூலப் பொருளை இலங்கை அமெரிக்காவிலிருந்து அதிகமாக வாங்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

மலையக மக்கள் தொடர்பில் காணி உரிமை, வீட்டு உரிமை ஆகிய விவாகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் தெளிவான பார்வையைக் கொண்டிருக்கவில்லை என மனோ கணேசன் கூறியுள்ளார். (அ)

## சைக்கிளில்...

நாவற்குழி வீதியால் பயணித்தார். இதன்போது அவ்வீதியால் வந்த ஓட்டோ மோதியதில் அவர் படுகாயமடைந்தார்.

இவர் நேற்று முன்தினம் தனது பத்து மாத குழந்தையையும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு நாவற்குழி வீதியால் பயணித்தார். இதன்போது அவ்வீதியால் வந்த ஓட்டோ மோதியதில் அவர் படுகாயமடைந்தார்.

இந்நிலையில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை அவர் உயிரிழந்தார். (அ-05)

## ஐ. தே. கவுக்கு...

இந்த அறிக்கையைக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை யைக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சியை இலக்கு வைக்க ஜே.வி.பி. திட்டமிட் டது. ஆனால் தற்போது அந்த பொறி யில் ஜே.வி.பி.யே சிக்கிக் கொண்டது.

1980களில் ஜே.வி.பி. செய்த மனிதப் படுகொலைகள், ஏற்படுத்திய கலவரங்கள் இன்று பேசுபொருளாகியுள்ளன. இதனா ல் கடந்த தேர்தல்களில் இவர்களுக்கு வாக்களித்த மக்கள் தமது தீர்மானத்தை மாற்றிக் கொண்டுள்ளனர் -என்றார்.

## கம்மன்பில...

விற்பனை செய்து 21 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றத்திற்காகவே உதய கம்மன்பிலவும் மற்றுமொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டனர்.

நீண்ட விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி நாமல் பண்டார பலாலே இந்த தீர்ப்பை வழங்கினார்.

1996 செப்ரெம்பர் 26ஆம் திகதி முதல் 1997 செப்ரெம்பர் 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வியாபாரியொருவரின் டிஜிற்றல் நொமினீஸ் தனியார் நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பான் ஏசியா வங்கிக்கு சொந்தமான 21 மில்லியன் பங்குகளை போலி சட்டப் பத்திரம் தயாரித்து விற்பனை செய்ததன் ஊடாக 21 மில்லியன் ரூபாயை நிதி மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் வியாபாரி சிட்னி ஜயசிங்க என்பவருக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சட்ட மா அதிபரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. (அ)

## பயங்கரவாத...

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆடை மற்றும் இறப்பர் உற்பத்திகள் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு சுமார் 3.5 பில்லியன் டொலருக்கான ஏற்றுமதிகள் இடம்பெறுகின்றன.

ஆனால், அங்கிருந்து 600 மில்லியன் டொலர் அளவிலேயே ஏற்றுமதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய எமக்கு பெரும் இலாபம் காணப்படுகிறது.

இவ்வாறான ஏற்றுமதிகளை கொண்ட நாடுகள் தொடர்பிலேயே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதிய வரி கொள்கைகளை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளார்.அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் நாம் சிந்திக்கவேண்டியுள்ளது -என்றார்.

## மின்சார ...

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

மின்சார சட்ட திருத்தம் தொடர்பில் நிதி அமைச்சிற்கும் மின்சக்தி அமைச்சுக்குமிடையில்முரண்பாடுகள்ஏற்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஒரு விடயத்தையும் தற்போது இன்னொரு விடயத்தையும் கூறுகின்றனர். நாட்டின் மின்சக்தி துறை மறுசீரமைக்கப்பட வேண்டும்.

இத்துறையில் தேசிய மற்றும் சர்வதேச முதலீடுகள் ஈர்க்கப்பட வேண்டும். அரசாங்கத்தால் மாத்திரம் இத்துறையை நவீனமயப்படுத்த முடியாது.

மின்சாரத்துறை நவீனமயப்படுத்தல் நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் அமைய வேண்டும். ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அரச சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மறுசீரமைப்பின் போது இந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதனை விடுத்து மீண்டும் பழைய நிலைமைக்கே செல்லக் கூடாது. ஆனால் அரசாங்கம் பழைய பாதையிலேயே திரும்ப பயணிக்கின்றது-என்றார்.

## இறக்குமதி...

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளும் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. குறித்த இயந்திரத்தை விடுவிக்க ஒரு மில்லியன் ரூபாய் சுங்கப் பிரிவுக்கு செலுத்தப்பட வேண்டும் எனவும் அதிகாரிகளால் கணக்கிடப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு இயந்திரத்தை கொள்வனவுக்கான விலைமனுக் கோரல் தொடர்பான ஆவணங்கள் உரிய நிறுவனத்திடம் கையளிக்கப்பட்ட போதும், பிற நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது.

எவ்வாறெனினும் நீண்ட காலத்துக்கு பின்னர் அவ்வியந்திரம் நாட்டை வந்தடைந்துள்ளது. 2023 பெப்ரவரி மாதம் களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்த சிரி ஸ்கான் இயந்திரம் செயலிழந்தது. இன்றுவரை அவசர பரிசோதனைக்காக நோயாளர்கள் அருகில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுவதுடன், ஏனைய நோயாளர் கள் ஹோமாகம, களுபோவில, ஹொரன உள்ளிட்ட வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இதனால் நோயாளர்களும் வைத்தியசாலை ஊழியர்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதுடன். தனியார் மருத்துவமனையில் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக பெருந்தொகையை செலவிட வேண்டியுள்ளது.

இது போன்ற உயர் தொழில் நுட்ப இயந்திரங்களை நீண்ட நாட்களுக்கு சுங்கப்பிரிவில் தடுத்து வைத்திருப்பதால் இயந்திரத்தின் பாகங்கள் சேதமடையக் கூடும். ஆகையால் இயந்திரத்தை உடனடியாக சுங்கப் பிரிவிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வாக்குச் சீட்டு அச்சிடல் ஞாயிறு முதல் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 25

நாட்டில் எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மாவட்ட செயலகங்களிலிருந்து பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில், நிறுவப்பட்ட நடைமுறையின் படி வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதை எளிதாக்குவதற்காக தேர்தல் ஆணையம் கடந்த சனிக்கிழமை புதிய மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியது.

தேர்தல் தொடர்பான புகார்களை பொதுமக்கள் விரைவாகச் சமர்ப்பிக்க இந்த செயலி உதவுகிறது.

இந்த செயலி மூலம் முறைப்பாடுகளை அளிக்கலாம், மேலும் பயனர்கள் தங்கள் முறைப்பாடுகளின்ம் நிலையைக் கண்காணிக்கலாம். இந்த செயலி பயனர்கள் தங்கள் கூற்றுக்களை ஆதரிக்க வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவும் அனுமதிக்கிறது என்று தலைவர் ரத்நாயக்க கூறினார். (அ)

# பயிற்சி விமானிகளின் தவறினாலேயே விபத்து

## காரணத்தை வெளியிட்டார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, மார்ச் 25

**பயிற்சி விமானிகளின் தவறு காரணமாகவே இலங்கை விமானப்படை விமானம் அண்மையில் விபத்துக்குள்ளானதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**



செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ரத்நாயக்க, விபத்து குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட தொழில் நுட்பக் குழுவின் விசாரணை அறிக்கையின் நகலைக் கேட்டுப் பெற்றதாகக் கூறினார்.

அந்த அறிக்கையின் படி, விமானம் மற்றும் இயந்திரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டுள்ளன. அவை பழையவை அல்ல என்று அவர் மேலும் தெளிவுபடுத்தினார்.

சாலைகளில் பழைய வாகனங்கள் ஓட அனுமதிக்கப்படும். ஆனால் விமானங்களில் அப்படிச் செய்ய முடியாது. இந்த குறிப்பிட்ட விமானத்தை இயக்கிய விமானிகள் பயிற்சியில் இருந்தனர். அவர்களால் ஒரு தவறு நடந்துள்ளது.

பயிற்சியாளர்கள் விபத்தில் இருந்து தப்பியதில் நாங்கள் நிம்மதியடைகிறோம்.

இது பயிற்சியின்போது ஒரு சாதாரண சம்பவம், உலகம் முழுவதும் இவ்வாறான விபத்துக்கள் நடக்கும் என்று அவர் கூறினார்.

கடந்த வாரம் விமானப்படை விமான விபத்துக்குள்ளானதற்கு இதுவே ஒரே காரணம் என்றும், விபத்து குறித்த தொழில்நுட்ப அறிக்கையின் கண்டுபிடிப்பும் இதுதான் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க வலியுறுத்தினார்.

கடந்த வெள்ளிக்கிழமை வாரியபொலவில் இலங்கை விமானப்படை பயிற்சி விமானம் விபத்துக்குள்ளானது.

இரண்டு விமானிகளுடன் சென்ற கே-8 பயிற்சி ஜெட் விமானம் திடீரென ராடர் தொடர்பை இழந்து, பின்னர் வாரியபொலவில் விபத்துக்குள்ளானது.

எனினும், இரு விமானிகளும் பாதுகாப்பாக வெளியேறி, குருநாகலில் தரையிறங்கினர். (அ)

### ஏப்ரல் 21 தாக்குதல் வழக்கு

# தொழில் அதிபர் மொஹமட் இப்ராஹிம் மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு, மார்ச் 25

ஏப்ரல் 21 தாக்குதலை நடத்திய இரண்டு தற்கொலை குண்டுதாரிகள் பற்றிய தகவல் களைப் பாதுகாப்புப் படையி னரிடமிருந்து மறைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த கோடீஸ்வர தொழில திபர் மொஹமட் இப்ராஹி முக்கு எதிராக சட்ட மா அதிபர் தாக்கல் செய்த வழக்கின் விசாரணையை ஜூலை 2 ஆம் திகதிக்கு கொழும்பு உயர் நீதி மன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் நவரட்ண மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் இரண்டாவது சாட்சியாகப் பெயரிடப்பட்ட கோடீஸ்வர தொழிலதிபர் முகமது இப்ரா ஹிமின் வீட்டில் பணிப்பெண் ணாகப் பணியாற்றிய பெண் வெளிநாடு சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

மற்றுமொரு சாட்சி வெளி நாடு செல்லும் அபாயம் உள் ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றில் தெரிவித்தார்.

இதன்படி,

குறித்த சாட்சிக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்ட நீதிய ரசர், குறித்த நபரின் வெளி நாட்டுப் பயணம் தொடர்பான அறிக்கைகளை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் இருந்து வரவழைத்து நீதிமன் றத்தில் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். (அ)

## மன்னார், பூநகரி உள்ளிட்ட சபைகளுக்கு வேட்புமனு ஏற்கும் நடவடிக்கை ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 25

மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டிய ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை நேற்று ஆரம்பமாகியது.

அதற்கமைய, எதிர்வரும் 27 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் குறித்த மூன்று பிரதேச சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் நிறைவடையவுள்ளது.

இதனிடையே, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டிய ஆகிய பிரதேச சபைகளுக்கான கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் எதிர்வரும் 26 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

இதேவேளை, ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 20 ஆம் திகதி நண்பகலுடன் நிறைவடைந்திருந்தது. (அ)

# அரசு தோல்வியடையும்!

## சரித்த ஹேரத் கூறுகிறார்

கொழும்பு, மார்ச்

பொருளாதாரச் செயற்பாடுகளால் அரசாங்கம் தோல்வியடையும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய வகையில் காத்திரமான பொருளாதார செயற்பாடுகள் அரசாங்கத்திடம் கிடையாது. அதனால் அரசாங்கம் தோல்வியடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகக் கூறி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியமைத்தது. எனினும் ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்பட்ட ஒப்பந்தம் மாற்றமில்லாமல் தொடர்கிறது.

தேர்தல் காலத்தில் ஒன்றைக் கூறிவிட்டு முன்னைய அரசாங்கத்தின் பாணியில் பயணிப்பதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.அவசர அவசரமாக தேர்தலை நடத்துவதன் நோக்கமும் அதுதான். தமிழ்- சிங்கள புத்தாண்டு, முஸ்லிம்களின் ரமழான் பண்டிகை, முக்கியமான போயா தினம் ஆகியவை குறித்து அரசாங்கம் கருத்திற் கொள்ளவில்லை.

நாட்டில் இடம்பெற்ற இரண்டு தேர்தல்களிலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். ஆயினும் எதிர்வரும் தேர்தலில் அவ்வாறு வாக்களிக்க மாட்டார்கள். ஏனென்றால் அரசாங்கத்தின் இயலாமையை மக்கள் அறிந்துள்ளார்கள்- என்றார். (அ)

## குழந்தைகள் பாதுகாப்பு குறித்து விழிப்புடன் செயற்படவேண்டும்!

கொழும்பு, மார்ச் 25

கடந்த வாரத்தில் நாட்டில் இரண்டு துயரமான குழந்தைகள் இறப்புகள் பதிவாகியுள்ளதைத்தொடர்ந்து, பெற்றோர்கள் தங்கள் சிறு பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறையில் பதிவான முதல் சம்பவத்தில், ஒரு வீட்டில் காலியான குளிர்பான போத்தலில் சேமித்து வைக்கப்பட்டிருந்த டீசலை உட்கொண்டதால் ஒரு குழந்தை இறந்தது.சம்பவத்தைத் தொடர்ந்து குழந்தையின் பெற்றோர் குழந்தையை ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர், மேலதிக சிகிச்சைக்காக குழந்தை யாழ்ப்பாண மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது, ஆனால் நேற்று முன் தினம் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

உயிரிழந்த குழந்தை ஊர்காவற்துறையைச் சேர்ந்த ஒரு வயது 09 மாதக் குழந்தை என்பது குறிப்பிடத்தக்கது.ஊர்காவற்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில், நெலுவாவில் காற்றழுத்தப்பட்ட பலூனினால் மூச்சுத் திணறி 11 வயது குழந்தைஇறந்தது. பலூன் தொண்டையில் சிக்கியதால் குழந்தை இறந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கை தீர்ப்பளித்துள்ளது. எனவே, பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் பெற்றோர் விழிப்புணர்வுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# தேர்தல் வன்முறைகள் 16 சம்பவங்களே பதிவு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, மார்ச் 25

தேர்தல் சட்டத்தை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எதிர்வரும் மே மாதம் ஆறாம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதனடிப்படையில் இந்தத் தேர்தலை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் கடமைப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தை அமுல்படுத்தல், பிரசாரங்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் உள்ளிட்ட வேலைத்திட்டங்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேட்புமனுத் தாக்கலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட மார்ச் மூன்றாம் திகதி முதல் கடந்த 21 ஆம் திகதி வரை தேர்தல் சட்டத்தை மீறியமை மற்றும் வன்முறை தொடர்பில் 16 சம்பவங்களே பதிவாகியுள்ளன.

இது தொடர்பில் சந்தேக நபர்கள் 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் வேட்பாளர்கள் பத்துப் பேரும் உள்ளடங்குகின்றனர்.

தேர்தல் காலத்தில் சட்டத்தை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org